பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 20.00

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 24 வியாழக்கிழமை (07.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 132



04

மீனவர்களின் ஆவி கூட மன்னிக்காது



04

தி.மு.க. தோல்வி அடையும்



05

பரீட்சை பயமாக இருக்கிறது



10

மேற்குலகம் ஒதுங்கியது ஏன்?

# மஹிந்த ராஜபக்ஷ அரசு மீது இறுகுகிறது அமெரிக்கப் பிடி

## மனித உரிமைகள் நிலையை பொறுத்தே எதிர்கால உறவு

வோஷிங்டன், ஏப்ரல் 07

மனித உரிமைகள் விவகாரம் மற்றும் இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்குப்பொறுப்புக் கூறுதல் ஆகிய இலங்கை விடயங்கள் தொடர்பில் அமெரிக்காவின் பிடி இறுகி வருகிறது. இந்த இரு விடயங்களிலும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களைப் பொறுத்தே கொழும்பு அரசுடனான ஒத்துழைப்பு இருக்கும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடித்து சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.07

பலாலி இராணுவத் தலைமையகத்தை அண்டிய பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். டபிள்யூ.ஈ.எஸ்.சம்பத் (வயது 19) என்ற சிப்பாயே காயமடைந்தவராவார்.

பலாலி இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரது முகம் மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் சிதறல் காயங்கள் காணப்பட்டன. (உ-04)

## பிளேக்கின் வருகையை பின்தள்ளியது கொழும்பு

கொழும்பு, ஏப். 07

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசியப் பிரிவுக்கான துணைச் செயலர் றொபேட் ஓ பிளேக் இலங்கைக்கு மேற்கொள்ள இருந்த பயணம் பிற்போடப்பட்டுள்ளது.

பயணத்தைப் பிற்போடுமாறு கொழும்பு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாட்டில் இல்லை என்பதால் றொபேட் ஓ பிளேக்கை இப்போது கொழும்பு வர வேண்டாம் என்று அரசு கேட்டுள்ளது.

இதையடுத்து அமைச்சர் பீரிஸ் நாட்டில் தங்கியிருக்கும் போது வரும் வகையில் பிளேக் தனது பயணத் திட்டத்தை மாற்றியமைக்கவுள்ளார் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் தற்போது பிரிட்டனில் தங்கி உள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காக (19ஆம் பக்கம் பார்க்க)

## சவூதி விபத்தில் சாவகச்சேரி வாசி உயிரிழப்பு

தென்மராட்சி,ஏப்.07

சவூதி அரேபியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்வயலை சொந்த இடமாகக் கொண்ட அருளானந்தம் பகீரதன் (வயது 29) என் ற இளைஞரே உயிரிழந்தார். இவருக்கு ஒரு பிள்ளை உண்டு. அவரது சடலத்தை சாவகச்சேரிக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (த-207)

## நல்லிணக்கத்தை ஏற்படுத்த அவகாசம் தேவை மேற்குலகிடம் வேண்டுகோள் விடுக்கிறார் பீரிஸ்

லண்டன், ஏப். 07

முப்பது வருடகாலப் போர் முடிவுக்கு வந்துவிட்டாலும் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசுக்குக் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார் வெளிவிவகாரத் துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்.

லண்டனில் கடந்த செவ்வாய்க் கிழமை அவர் இதனைத் தெரிவித்தார். வெற்றி மமதையுடன் இலங்கை அரசு செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டையும் அவர் மறுத்தார்.



வடக்கு - கிழக்கில் மனிதாரந்த பிரச்சினைகளைக் கையாள்வதில் அரசு மிக மெத்தனமாகச் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை அவர் அடியோடு மறுத்தார். முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு வழங்கியது உட்பட குறிப்பிடத்தகுந்த அடைவுகளை அரசு மேற்கொண்டிருக்கின்றது என்று அவர் கூறினார்.

"மிகக் குறுகியதான, கடந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## மும்பை சென்ற ஜனாதிபதிக்கு மரியாதை இல்லை

### ஒளிப்படம் ஒன்றுகூட எடுப்பதற்கு விடவில்லை

மும்பை, ஏப். 07

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தைக் காண மும்பைக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியா உரிய மரியாதைகளை வழங்கவில்லை என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. அழையா விருந்தாளியாக அவர் சென்றதே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. 'மும்பை மிரர்' பத்திரிகை இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதிக்கு உரிய மரியாதைகள் வழங்கப்படாது அவர் புறக்கணிக்கப்பட்டமை குறித்து இலங்கை அதிகாரபூர்வமாக முறையிடாத போதும் அதிகாரிகள் தமது அதிருப்தியை ஊடகவியலாளர்களிடம் வெளிப்படுத்தி உள்ளனர்.

ராஜபக்ஷவுடன் சென்ற பரிவாரங்களுக்கு கேட்டளவு இருக்கைகளை இந்திய அதிகாரிகள் ஒதுக்காது விட்டதும், போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் இரு அணியிருக்கும் ஜனாதிபதி அறிமுகம் செய்து வைக்கப்படாமை ஆகியவையே முக்கிய இழிவுபடுத்தல்களாக அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட மும்பையிலுள்ள இலங்கைத் (19ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வர் தன்னிச்சையாக செயற்படுகிறார் ஏனையோர் துஷ்பிரயோகம் செய்கின்றனர்

### அதனால்தான் தனித்து வந்துவிட்டேன் என்கிறார் மாநகர ஆளும் தரப்பு உறுப்பினர் நிஷாந்தன்

யாழ்ப்பாணம், ஏப்.07

யாழ்.மாநகர சபையின் சொத்துக்களை முதல்வரும் சில உறுப்பினர்களும் தவறான முறையில் பயன்படுத்தியும் அழித்தும், துஷ்பிரயோகம் செய்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டினார் யாழ். மாநகரசபையின் ஆளும் தரப்பு உறுப்பினர் எஸ். நிஷாந்தன்.

முதல்வர் தன்னிச்சையாகச் செயற்படுபவர் என்று கூறும் அவர், கூட்டணி என்ற வகையில் அதில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுடன் எதுதொடர்பிலும் கலந்தாலோசிப்பதில்லை என்றும் தெரிவித்தார்.

இந்தக் காரணங்களுக்காகவேதான் தனித்துச் செயற்படத் தீர்மானித்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர சபையில் இடம்பெறும் ஊழல்கள் தொடர்பாகவும் ஆளும் தரப்பில் இருந்து கொண்டே முதல்வர் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தது தொடர்பிலும் கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- ஆளும் கட்சியைப் பொறுத்த வரை இரண்டு தரப்பினர் உள்ளனர். ஒன்று ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள். அடுத்தது (19ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.யுடனும் அரசு பேசுமாம்

கொழும்பு, ஏப். 07

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் அரசு - தமிழ்க் கூட்டமைப்பு இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் இன்று நடைபெற உள்ளன.

இந்த நிலையில், தீர்வு தொடர்பில் அரசு தனது கட்சியுடனும் பேசும் என்று தெரிவித்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நேற்றுமுன்தினம் இரவு தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

# கஷ்டப்பட்டு உங்களைப் படிக்க வைக்கும் பெற்றோரின் கனவைக் கலைக்காதீர்கள்!

## 'ராகிங்'கில் ஈடுபட்ட மாணவர்களுக்கு நீதிபதி அறிவுரை

யாழ்ப்பாணம், ஏப்.7

பெற்றோர் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் உங்களைக் கல்வி கற்பதற்காக அனுப்பி வைக்க நீங்கள் 'ராகிங்கில்' ஈடுபட்டு அவர்களுடைய கனவைக் கலைக்கப் பார்க்கிறீர்கள்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 'ராகிங்'கில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்ட மாணவர்களைப் பார்த்து யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா இவ்வாறு கடிந்து கொண்டார்.

கடந்த வாரம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் புதுமுக மாணவர்களைத் தாக்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட 13 மாணவர்களைக் கைதுசெய்த கோப்பாய் பொலிஸார், அவர்களை யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இந்தச் சம்பவத்தின் 3ஆம் கட்ட விசாரணைகள் யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று இடம்பெற்றன. இதன்போது யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா மாணவர்களைக் கடுமையாக எச்சரித்தார்.

கல்வியியற் கல்லூரிக்கு ஒரு மாணவன் தெரிவு செய்யப்படுகிறான் என்றால், அவன் அன்றிலிருந்து தான் ஓர் ஆசிரியர் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் ஒரு மாணவ சமுதாயத்தை வழிப்படுத்த வேண்டிய நீங்கள் இவ்வாறு தடம்மாறி நடந்து கொள்கிறீர்கள்.

உங்களுடைய பெற்றோர் பலர் அன்றாடம் கூலிவேலை செய்பவர்களாகவும் விவசாயம், கடற்றொழில் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். பெற்றோரை நீதிமன்றத்துக்கு இழுக்கவா அவர்கள் உங்களைப் படிப்பித்தார்கள். எவ்வளவோ கஷ்டத்துக்கு மத்தியில் உங்களுக்குக் கல்வியூட்ட வேண்டும் என்ற வெறியுடன் அவர்கள் தியாகங்களைச் செய்கிறார்கள்.

இதனையெல்லாம் நீங்கள் உணர்ந்து கொள்ளாது பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறீர்கள் என்று கூறி வழக்கு விசாரணையை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிவான்.

இந்த விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்ட 13 மாணவர்கள், கல்லூரியின் ஒழுக்காற்றுப் பிரிவினர், மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (த-9)

# அறநெறி ஆசிரியர்களுக்கான தகுதிகாண் பரீட்சை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தகுதிகாண் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணியிலிருந்து மு.ப.11 மணிவரை இந்துசமயமும் மு.ப. 11.30 மணியிலிருந்து பி.ப. ஒரு மணிவரை தமிழ்மொழிப் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான சுட்டிலக்கம், பரீட்சை மண்டபம், நேர அட்டவணை தொடர்பான விவரங்கள் அந்தந்த அறநெறிப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைப் பரீட்சைக்குத் தோற்றுமாறு திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (த-4)

# துறைமுக அதிகாரசபை ஊழியர்கள் நட்டஈட்டுடன் ஓய்வுபெறுவதற்கு வாய்ப்பு

## மே 5 இற்கு முன் விண்ணப்பிக்கலாம்

இலங்கைத் துறைமுக அதிகாரசபை ஊழியர்கள் சுய விருப்பின்பேரில் ஓய்வு பெற்றுச் செல்லும் யோசனைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனத் துறைமுக அதிகாரசபையின் தலைவர் கலாநிதி பிரியத்பந்து விக்கிரம தெரிவித்துள்ளார்.

துறைமுக அதிகார சபையில் பத்து ஆண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மற்றும் ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட நிரந்தர சேவைக்காலம் எஞ்சியிருக்கும் ஆண், பெண் ஊழியர்கள் இவ்விதம் சுயவிருப்பின்பேரில் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும், விண்ணப்பங்களை விண்ணப்பிக்க ஏப்ரல்5ஆம்திகதி முதல் மேமாதம் 6 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுமெனவும் துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது.

இருபது லட்சம் ரூபாவை அதிகபட்ச நட்ட ஈட்டுத் தொகையாகப் பெறும் யோசனைத் திட்டமொன்று இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவையை முடித்துக் கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பலாபலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் துறைமுக அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

மேலும், சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்றுச் செல்லும் முறையின் கீழ் துறைமுகசேவை மேலதிக ஊழியர்கள் 2 ஆயிரம் பேர் வரைஓய்வுபெற்றுச் செல்லக் கூடுமெனவும் துறைமுகங்கள் அதிகாரசபை தெரிவிக்கின்றது. (த-22)

# புதுவருட பஞ்சாங்கம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.7

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பிறக்கின்ற 'கர' தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கையடக்கப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தப் பஞ்சாங்கத்தில் புதுவருடப் பிறப்புத் தொடர்பான சுபநேரங்கள், புதுவருடப் பலன்கள், மாத ரீதியான சுபநேர விவரங்கள், இந்துக்களின் விரதங்கள், இலங்கையில் உள்ள பிரதான ஆலயங்களின் வருடாந்த விழாக்கள் போன்ற பல அம்சங்கள் அடங்கியுள்ளன.

இலவசமாக விநியோகிக்கப்படும் இந்தப் புதிய பஞ்சாங்கத்தைப் பெற விரும்புவோர் திணைக்களத்துக்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் சுயமுகவரி எழுதப்பட்டு முப்பது ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 25X17 செ.மீ. அளவான கடித உறையை 'பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248 1/1 காலி வீதி, கொழும்பு 4' என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (த)

# மாணவர்களுக்கு பாதணிகள்

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய மாணவர்களுக்கென ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பாதணிகளை கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்த நிகழ்வு வித்தியாலய அதிபர் கே.ஜெகநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் திருமதி ம.பத்மகேசரி உள்ளிட்ட குழுவினர் மாணவர்களுக்கான பாதணிகளை வழங்கினர். (த-4)

# உலக சுகாதார தினத்தையொட்டி இன்று விழிப்புணர்வு நிகழ்வுகள்

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பயிலுநர்களால் யாழ்ப்பாணம், உடுவில், நல்லூர் ஆகிய பிரதேசங்களில் இன்றையதினம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

சுகாதார விழிப்புணர்வுக் கையேடுகள் இலவசமாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளதுடன் தொற்று நோய்கள், நாள்பட்ட நோய்கள் தொடர்பான கருத்துரைகளும் வழங்கப்படவுள்ளன.

'நோய்கள் வருமுன் காப்பதே சிறந்தது' என்னும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்கள், நோய்கள் பற்றிய விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதே இந்த நூல் விநியோகத்தின் நோக்கம் எனத்தெரிவிக்கப்பட்டது.

இன்று கொண்டாடப்படும் உலக சுகாதார தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்த நிகழ்வுக்குப் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-313)

# மாநகர சபைக்கான புதிய கட்டடம் எமது பதவிக் காலத்திலேயே அமையும்

## முதல்வர் யோகேஸ்வரி கூறுகிறார்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் புதிய கட்டடம் எமது பதவிக் காலத்துக்குள் கட்டி முடிக்கப்படும் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ரூபா 60 கோடி செலவில் இந்தக் கட்டடம் முற்றவெளி மாநகரசபை வளாகத்தில் அமைக்கப்படும் எனவும் இதற்கான நிதியைப் பெற்றுத் தருவதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அக்கறை கொண்டுள்ளார் எனவும் முதல்வர் கூறினார்.

கடந்த ஆண்டு நல்லூர் உற்சவ காலத்தில் பொதுமக்களின் உதவியைக்கோரி மாநகர சபை உண்டியல் வைத்திருந்தது. அதன்மூலம் புதிய கட்டடத்துக்காக மக்களிடமிருந்து நிதி உதவிகள் கிடைக்கப்பெற்றதா? எனச் செய்தியாளர் கேட்டபோது:-

உண்டியல் வைக்கப்பட்டது எனினும் நிதியுதவிகள் கிடைக்கவில்லை எனவும் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பதிலளித்தார். (த-7)

# மூன்று அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்

கொழும்பு,ஏப்.7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மூன்று அமைச்சுக்களுக்கும் புதிய செயலாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, தபால் அமைச்சுக்கு ஹேமசிறி பெர்னாண்டோவும், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சுக்கு திருமதி சுமித்ரா ராஹூபத்தவும் தனியார் போக்குவரத்துச் சேவை அமைச்சுக்கு விக்ரர் சமரவீரவும் புதிய செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தபால் அமைச்சின் புதிய செயலாளரான ஹேமசிறி பெர்னாண்டோ, பிரதமரின் முன்னாள் செயலாளரும் ரெலிக்கொம் நிறுவனத்தின் முன்னாள் தலைவருமாவார்.

இவர் ஜனாதிபதியின் விளையாட்டு விவகாரங்கள் தொடர்பான ஆலோசகராகவும் உள்ளார் என்பதுடன் பொதுநலவாய அமைப்பின் விளையாட்டுச் சம்மேளனத்தின் உபதலைவர் பதவியையும் இலங்கை ஒலிம்பிக் சபையின் தலைவர் பதவியையும் வகிக்கிறார்.

சிறுவர் மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சின் புதிய செயலாளரான சுமித்ரா ராஹூபத்த இலங்கை நிர்வாக சேவை விசேட தர உத்தியோகத்தரும் எழுத்தாளரும் ஆவார்.

தனியார் போக்குவரத்துச் சேவை அமைச்சின் புதிய செயலாளரான விக்ரர் சமரவீர, மேல் மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளராவார். (த-22)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கிழக்கின் திடீர் இராணுவ முற்றுகை எதற்கான கட்டியம்?

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை மட்டும் தெரிவு செய்து, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பெரும் எடுப்பில் படையினரும் பொலிஸாரும் சேர்ந்து திடீர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தந்தப் பகுதிகளில் கவச வாகனங்கள் சகிதம் படையினர் குவிக்கப்பட்டு, தமிழர் வாழும் பிரதேசங்கள் எதுவும் மீதம் வைக்கப்படாமல், போர்க்காலத்தில் நடத்தப்பட்டது போன்ற அதே அளவு வீச்சில், சுற்றிவளைப்புத் தேடுதல் இடம்பெற்றிருக்கிறது. போர் முடிவுற்று அடுத்த மாத நடுப்பகுதியோடு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகப் போகின்றன. திடீரென இப்போது பாரிய அளவில் தேடுதல் வேட்டை நடத்தியதன் பின்னணி என்ன, உள்நோக்கம் ஏது என்று எவருக்கும் புரியவில்லை...!

மக்களைச் சிரமத்துக்கு ஆளாக்காத வகையில் தேடுதல் நடத்தப்பட்டதாக வெகு ''சிம்பிளாக'' பிரதேச இராணுவக் கட்டளைத் தளபதி வியாக்கியானம் தெரிவித்திருக்கின்றார். அவருக்கும், அரசாங்கத்துக்கும் இது திடீர் சுற்றிவளைப்பும் தேடுதலும் ஆக இருக்கலாம். ஆனால்....? பொதுமக்களுக்கு உயிர்போய் திரும்பி வந்த அனுபவமாகவே இருந்திருக்கும்.

நாட்டில் அமைதி நிலைகொண்டு விட்டது. அதனால் இரண்டு வருடங்களுக்கு முன்னதாக, மூன்று தசாப்த காலமாக நிரந்தரமாகக் குடிகொண்டிருந்த படையினரின் கெடுபிடிகளும், துன்புறுத்தல்களும் ஓய்ந்துவிட்டன; தூண்டப்படும் அச்சமும், வதைகளும் இல்லாமல் ஓரளவிலேனும் நிம்மதியாக வாழ முடியும் என்ற கிழக்குத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் கற்பனைகளும் ஒரே நாளில் ஓடாகத் தேய்ந்துவிட்டது. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அச்ச உணர்வையும் பதற்றமான மனநிலையையும் அவற்றை ஏற்கனவே அனுபவித்த வடக்கு, கிழக்கு மக்களால் மட்டுமே உணர்ந்துகொள்ள முடியும். அனுபவ ரீதியாகத் தெரிந்து கொள்ள இயலும்.

படையினரின் இந்தத் திடீர் சுற்றிவளைப்பும் தேடுதலும், கிழக்கில் தமிழர் பிரதேசங்களில், குறிச்சிகளில் மீண்டும் ஆயுததாரிகளின் நடமாட்டம் இருக்கின்றது என்ற சந்தேகத்தில்தான் மேற்கொள்ளப்பட்டிருக்குமோ என்ற எண்ணமே அவர்களிடம் எழுந்திருக்கும் -

அதன்பேரில் இனிமேலும் இத்தகைய திடீர் சுற்றிவளைப்பு, சோதனை ஆகிய அச்சுறுத்தல்கள் தொடரலாம் என்ற மனப்பயத்தை உண்டாக்கி உள்ளது. திடீர் சுற்றிவளைப்பு சோதனைகள் எப்போதும் நடக்கலாம் என்ற அச்ச உணர்வுடன் இனி அம்மக்கள் வாழும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் சோதனை நடத்திய படையினரும் பொலிஸாரும் வீதிகளில் சென்ற வாகனங்களை மறித்துச் சோதனையிட்டு, அவற்றின் இலக்கங்களையும் முந்திய காலத்தில் செய்தது போன்றே பதிவு செய்திருக்கிறார்கள். அந்த வாகனங்கள் படையினரின் தேவைக்கு அவசியம் என்று கருதினால் நள்ளிரவுத் தொல்லையும் இனி எந்த நாளில் வருமோ என்ற மனப்பயமும் கிலேசமும் மக்களைப் பாடாய்ப்படுத்தப் போகின்றது.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், பெருக்கிப் பிரித்துக் கணக்கிட்டால் கிழக்கு வாழ் தமிழ் மக்களை இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை ஊடாக, பலத்தைக் காட்டிப் பயமுறுத்தும், எப்போதும் எதுவும் நடக்கலாம் என்று ஏக்கத்துடன் வாழும் ஒரு நிலையைத் தோற்றுவிக்கும் திட்டமிட்ட அரசியல் வியூகமாகவும் இது இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

அது ஒருபுறமிருக்க-

கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் எங்கும் ஒரே நாளில் நடத்தப்பட்ட இராணுவ - பொலிஸ் கூட்டுச் சுற்றிவளைப்பு -

அந்தப் பகுதிகளில் இருந்து இராணுவம் அகலப் போவதில்லை; சிவில் நிர்வாகத்துக்குப் புறம்பாக இராணுவம் மேலாண்மைத் தனத்துடன் செயற்படும் என்பதற்கான தொடுகுறியாகக் கொள்ளத் தக்கதுமாகும்.

ஜனநாயக ஆட்சிக்கும், அதன் செயலாண்மைக்கும் சமாந்தரமாக-சில வேளைகளில் அதனைவிட மேலோங்கியதாக - இராணுவ மேலாதிக்கத்துக்கு ஓர் இடைவெளியைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியாக, பரீட்சார்த்த ஏற்பாடாகவுங்கூட கிழக்கில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலைக் கருதலாம்.

தமிழ் மக்களே!

இராணுவத் தரப்புகளின் நெருக்கீடுகள் ஓய்ந்துவிட்டன என்று கருதாதீர்கள், கற்பனையும் செய்யாதீர்கள்.

அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச் சட்டமும் தொடர்ந்து அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வரை, ஜனநாயகம், சிவில் நிர்வாகம் என்பவை இரண்டாம் படிநிலைச் சமாச்சாரங்களே என்பதனைச் சகல தமிழ் மக்களுக்கும் மறைபொருளாக உணர்த்தும் கைங்கரியமே, திடீர் இராணுவச் சுற்றிவளைப்பும் தேடுதலும் ஆகும். இது, கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு முதலில் மறைமுகமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

மேலும்-

அவசரகாலச் சட்டத்தை நீடித்து அந்தக் கம்பளத்தின் கீழ் தமிழ்ப் பகுதிகளில் அரைமட்ட (*Semi*) இராணுவ ஆட்சி எப்போதும் நிலைகொள்ளவுங்கூடும் என்பதற்கான முதற்சமிக்ஞையாகவும் கிழக்கின் செவ்வாய் ஒத்திகையைக் கொள்வது தப்பாகுமா...?

# உலக உணவுத் திட்டப் பொருள்களை திருடிய சந்தேகத்தின் பேரில் இருவர் கைது

மன்னார், ஏப்.7

உலக உணவுத்திட்டத்தின் 82 லட்சத்து 74 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மன்னார் மாவட்டச் செயலக ஊழியர்கள் இருவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலகத்தின் களஞ்சியப் பொறுப்பாளரும், மற்றுமொரு ஊழியரும் மன்னார் பொலிஸாரால் கடந்த மாதம் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்ற நீதிவான் திருமதி கே.ஜீவராணி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் சந்தேகநபர் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டுவருகின்ற உலக உணவு நிறுவனம் தனது களஞ்சியத்தை மன்னார் மாவட்டச் செயலகத்தில் பேணி வருகின்றது.

அந்தக் களஞ்சியத்தில் மாவட்டச் செயலகத்தின் ஊழியர்கள் இருவர் பொருள்களைச் சாதுரியமாகக் கட்டம் கட்டமாக வெளியில் விற்பனை செய்வதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சந்தேகத்தின் பேரில் அந்த இருவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இம்மானுவேல் அருள்நேசன், குருசாமி கனகசபாபதி கௌரியா ஆகிய இருவருமே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-9)

# 60 ஆயிரம் விவசாயிகளுக்கு 3 ஆயிரம் கோடி ரூபா கடன்

## சிறுபோகத்துக்கு வழங்கப்படும் என்கிறது மத்திய வங்கி

கொழும்பு, ஏப்.7

எதிர்வரும் சிறு போகத்தில் 60 ஆயிரம் விவசாயிகளுக்கு 3,000 கோடி ரூபாவைப் பயிர்செய்கைக் கடனாக வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவர்களுள் 30 ஆயிரம் பேர் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த விவசாயிகள் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் ஆண்டொன்றுக்கு 8% என்ற சலுகை வட்டியுடன் நெல் மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கைகளுக்காக அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக இந்தக் கடன்கள் வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கியின் உதவி ஆளுநரான டபிள்யூ.எம். கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும், '' போகங்களுக்கான கடன்கள்'' என்ற வகையில் இந்தக் கடன்கள் வழங்கப்படவுள்ளதோடு போக விளைச்சலின் அறுவடையின் பின்னர் மேற்படிக் கடனை வங்கிக்குத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு விவசாயிகளுக்கு உரியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நெற்செய்கைக்கு ஏக்கருக்கு 13 ஆயிரம் ரூபா முதல் 23 ஆயிரம் ரூபா வரையான கடன்தொகையும், மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கு 75 ஆயிரம் ரூபாவும், வெங்காயச் செய்கைக்கு 90 ஆயிரம் ரூபாவும், சோளப்பயிற் செய்கைக்கு 25 ஆயிரம் ரூபாவும், உழுந்துப் பயிர்ச்செய்கைக்கு 20 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்படவுள்ளதாகவும் டபிள்யூ.எம்.கருணாரத்ன தெரிவித்துள்ளார். (த-22)

# காரைநகர் உ.அ.அ.பிரிவில் கிராம சேவகர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஏப்.7

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு ஒரு கிராம சேவையாளரே கடமையாற்றுகின்ற நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட காரைநகரில் தற்போது 4 கிராம சேவையாளர்களே கடமையாற்றுகின்றனர். இதனால் ஒருவர் லீவில் சென்றால் நான்கு கிராம சேவையாளர் பிரிவுக்குஒருவர்பதில் கடமையாற்ற வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இதன் காரணமாகக் கிராமசேவையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர், எனவே காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குப் புதிய கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த)

# நவாலி சின்னப்பா வீதியை புனரமைக்க 76 லட்சம் ரூபா

கொழும்பு, ஏப்.7

நவாலி சின்னப்பா வீதி 76 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்த வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் மக்களின் போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக இருந்தது. இந்த வீதியின் புனரமைப்புத் தொடர்பாகப் பலரிடம் பொதுமக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து தற்போது ' நிக்கொட் ' நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நவாலி சின்னப்பா வீதிப் புனரமைப்புக்காக 76 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (த-313)

# சமயமும் சுகாதாரமும்

சில பேர் சாப்பிடும் முன்பு கையில் நீரை எடுத்து இலையை சுற்றி பஞ்ச பராணன்களின் பெயரைச் சொல்லிவிட்ட பிறகே உண்ணத் தொடங்குவார்கள். காரணம் என்ன? தமிழர் கலாசாரத்தில் அதுவும் ஒன்று எனச் சொல்லப்படும். உண்மையில் அன்னத்தையோ அன்னம் இருக்கும் தட்டையோ நோக்கி எறும்பு போன்ற சிறு பூச்சிகள் வரலாம். அவை உணவுடன் கலந்து உணவைப் பாழ்படுத் தலாம். அவற்றை தவிர்ப்பதற்காகவே நீரை சுற்றி தெளிக்கிறார்கள். அவை அந்த நீர், வேலியைத் தாண்டி உண்ணும் தட்டுக்கு வரமாட்டா. இப் படிச் சிறிய விசயங்களுக்கெல்லாம் பாரத நாட்டுக் கலாசாரத் தில் பதில்கள் இருக் கின்றன. அர்த்தமற்ற வார்த்தைகள் என்று எதுவுமே பாரத கலாசாரத்தில் கிடையவே கிடையாது. ஆனால் அர்த்தம் தெரியாதவர்கள் தான் அவற்றை சரியாகப் பயன்படுத்துவதில்லை.

*(நன்றி: சாயி அருளமுதம்)*



சாயி சிந்தனை

# இறந்த மீனவர்களின் ஆவி கூட கருணாநிதியை மன்னிக்காது

## விஜயகாந்த் ஆவேசம்



இலங்கைக் கடற்படையால் சுட்டுக்கொல்லாப்பட்டு இறந்த மீனவர்களின் ஆவி கூட, கருணாநிதியை மன்னிக்காது என்று தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

தே.மு.தி.க., வேட்பாளர் முஜிபுர் ரகுமானை ஆதரித்து, ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானையில் பிரசாரம் செய்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

தமிழர்களின் உணர்வைக் கச்சதீவு மூலம் தாரை வார்த்துக்கொடுத்தார். இலங்கைக் கடற்படையால், 550 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்களின் ஆவிகூட, கருணாநிதியை மன்னிக்காது. எம்.ஜி.ஆர்., ஆரம்பித்த கட்சியில் கூட்டணி வைத்திருப்பது, பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

மாறிவரும் காலங்களில், எத்தனையோ திட்டங்கள் இருந்தும், பள்ளிக் குழந்தைகள், மரத்தடியில் கல்வி கற்பது வெட்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

கலைஞர் காப்பீட்டுத் திட்டம்என்றபெயரில், தனியார் மருத்துவமனைக்குக் கிராம மக்களை அனுப்புகின்றனர். அந்த ரூபாவில், சிறிய சிகிச்சை கூட செய்ய முடியவில்லை. சிகிச்சைக்காக ஸ்டாலின் லண்டன் செல்கிறார். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்துக்கு என்ன நடந்தது? அதில் சிகிச்சை பெறுவதை விட்டு ஏன் லண்டன் செல்ல வேண்டும்? அவர் சிகிச்சைக்காகச் செல்லவில்லை; நாணயத்தாள்களை மாற்றச் செல்கிறார்.

கருணாநிதி, மக்களுக்குச் சேவை செய்ய வரவில்லை; குடும்பத்திற்குச் சேவை செய்யவே வந்துள்ளார். காங்கிரஸ், கூட்டணிக்கு, 63 இடங்கள் கொடுத்ததன் இரகசியம் என்ன தெரியுமா? குடும்பத்தினரைக் கைது செய்ய மாட்டார்கள் என்பதற்காகத் தான் எனவே தேர்தல் முடிவுக்கு பின், குடும்பத்துடன் கைதாவது உறுதி.அ.தி.மு.க ஆட்சி அமையும் என்ற பயத்தில், சில, தொலைக்காட்சிகளில், விஜயகாந்த் தப்பாகப் கூறுவார் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பதும், மீண்டும் மீண்டும் கட்சிகளை குற்றஞ்சாட்டுவதாகவும் உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார். (201)

## ஆரம்பம்.....



அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி இரண்டு நாள் தமிழகத் தேர்தல் பிரசாரத்தை ஈரோடில் தொடங்கினார். (த)

# இராமேஸ்வர மீனவர்கள் மாயம்; இலங்கைக் கடற்படை மீது சந்தேகம்

## மத்திய அரசுக்கு வைகோ கடிதம்

இராமேஸ்வர மீனவர்கள் 4 பேர் காணாமற்போனதாகவும், இலங்கைக் கடற்படையினர்தான், அந்தப் படகைக் கடத்திச் சென்று இருக்க வேண்டும் என இராமேஸ்வரம் மீனவர்கள் கருதுகிறார்கள் என்றும் வைகோ கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேற்படி 4 மீனவர்களையும் மீட்குமாறு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். இதுகுறித்து, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுக்கு வைகோ எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த அந்தோனி என்பவருக்குச் சொந்தமான மீன்பிடிப் படகில் விக்டஸ், அந்தோனி, ஜான் பால், மாரி முத்து ஆகிய நான்கு மீனவர்கள் கடந்த 2 ஆம் திகதி அதிகாலையில் மீன்பிடிக்கச் சென்றனர்.

ஒரு நாள் பயணத்துக்கு மட்டுமே அவர்களிடம் பெற்றோல் இருந்துள்ளது. எனவே, மறுநாள் 3ஆம் திகதி அதிகாலை அவர்கள் திரும்பி வந்திருக்க வேண்டும். ஆனால், இரண்டு நாள்கள் ஆகியும் அவர்கள் திரும்பி வரவில்லை.

அந்தப் பகுதி மீனவர்கள் கடலில் சென்று தேடியபோது, அவர்கள் சென்ற படகையும் காணவில்லை.



அந்தப் பகுதியில் இலங்கைக் கடற்படையினரின் நடமாட்டத்தை இதர மீனவர்கள் பார்த்துள்ளனர். எனவே, இலங்கைக் கடற்படையினர்தான், அந்தப் படகைக் கடத்திச் சென்று இருக்க வேண்டும் என இராமேஸ்வரம் மீனவர்கள் கருதுகின்றனர். கடத்திச் செல்லப்பட்ட மீனவர்களின் உயிருக்கும், உடமைக்கும் எந்தவித ஆபத்தும் இன்றி அவர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தனது கடிதத்தில் வைகோ கேட்டுக் கொண்டுள்ளார்.

# மக்கள் நலத் திட்டங்களைச் சரியான முறையில் செயற்படுத்தாததால் தி.மு.க. தோல்வி அடையும்

## வெங்கைய நாயுடு

மதுரை,ஏப்.7

மக்கள் நலத் திட்டங்களை சரியான முறையில் செயற்படுத்தாததால் ஆளும் கட்சியான தி.மு.க. இந்த முறை தேர்தலில் கண்டிப்பாகத் தோல்வி அடையும் என்று பா.ஜ.க. தலைவர் வெங்கைய நாயுடு கூறியுள்ளார்.

பாரதிய ஜனதாக் கட்சி கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக மதுரைக்குச் சென்ற பா.ஜ.க தலைவர் வெங்கைய நாயுடு, நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலவசத் திட்டங்களால் மேலும் மேலும் ஊழல்கள்தான் நடக்கின்றன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இலவசத் திட்டங்கள் மறைமுக ஊழலுக்கு வழிகோலுகின்றன.

மத்திய அரசு கூடுதலாக அதிகாரிகளை நியமித்துத் தமிழகத் தேர்தலை முறையாகக் கண்காணிக்க வேண்டும். முதல்வர் கூறுவதுபோல் தேர்தல் ஆணையம் ஒருதலைப்பட்சமாக நடந்து



கொள்ளவில்லை.

தேர்தல் நியாயமாக நடக்க தேர்தல் ஆணையம் முயன்று வருகிறது.

சங்கக் கடைகள், சிறிய கடைகள், தேநீர்க் கடைகளில்கூட பண விநியோகத்தில் ஆளும் கூட்டணிக் கட்சியினர் ஈடுபடுவதைப் பார்க்கும்போது, தேர்தல் ஆணையம் இன்னும் இதில் அதிக முனைப்புக் காட்ட வேண்டும் என்று தோன்றுகிறது. ஊழலைத் தடுக்க இன்னும் கூடுதல் கண்காணிப்புத் தேவை.

நடைபெறுகின்ற 5 மாநிலத் தேர்தலுக்குப் பின்னர் மத்தியில் நிச்சயம் மாற்றம் ஏற்படும். மேலும், கொமன்வெல்த் ஊழல் பற்றி மீண்டும் மக்களவையில் விவாதம் எழுப்பப்படும். தமிழக சட்டசபைக்குள் இந்த முறை கணிசமான எண்ணிக்கையில் பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர்கள் செல்வார்கள் என்று அவர் கூறியுள்ளார். (201)

# காங்.-தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாக பிரதமர் பிரசாரம்

கோவை, ஏப்.7

காங்கிரஸ் - தி.மு.க., கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரதமர் மன்மோகன்சிங் கோவையில் நாளை மறுதினம் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார் என்று தமிழகக் காங்கிரஸ் குழு தலைவர் தங்கபாலு செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் பிரதமருடன் குலாம் நபி ஆசாத்தும் செல்லவுள்ளார்.

தமிழகம் செல்லும் பிரதமர் மத்திய, மாநில அரசுகளின் சாதனைகளை விளக்கிப் பிரசாரம் மேற்கொள்வார் - என்றார்.

# காங்கிரஸை வீழ்த்தும் யுத்த களத்தில் நிற்கிறேன்

## இயக்குநர் சீமான் கருத்து



கோவை,ஏப்.7

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக இயக்குநர் சீமான் தமிழ்நாடு முழுவதும் பிரசாரம் செய்து வருகிறார். கோவை தொண்டா முத்தூர் தொகுதிக்குட்பட்ட செல்வபுரத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு சீமான் கூறியதாவது:-

தேர்தல் களத்தில் பல்வேறு கட்சிகள் நிற்கின்றன. ஆனால் நாம் தமிழர் கட்சி யுத்த களத்தில் நிற்கிறது. காங்கிரஸ் கட்சியை இந்தத் தேர்தலில் வீழ்த்த வேண்டும் என்ற உறுதியுடன் தமிழக மக்கள் முன் நம்பிக்கையுடன் நிற்கிறோம்.

இலங்கையில் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள அரசுக்கு துணை போன காங்கிரஸ் கட்சிக்குத் தமிழகத்தில் ஓர் இடம் கூடக் கிடைக்காமல் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும். காங்கிரஸுக்குத் துணைபோன ஆட்சி மாறவேண்டும். ஈழத்தமிழர்களுக்குச் செய்த வஞ்சகத்திற்கு தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை வஞ்சிக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிகளையும் தோற்கடிக்க வேண்டும். காங்கிரஸுக்கு துணைபோன ஆட்சி தமிழகத்தில் மாற்றப்பட வேண்டும்.

காங்கிரஸ் அதனுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிகளைத் தோற்கடிக்க வாக்காளர்கள் இரட்டை இலை சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். தொண்டாமுத்தூர் தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் எஸ்.பி.வேலுமணிக்கு வாக்களியுங்கள் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (201)

# நாடாளும் மக்கள் கட்சி வேட்பாளர் அ.தி.மு கவில் இணைந்தார்

தென்காசி, ஏப். 7

தென்காசியில் நடிகர் கார்த்திக்கின் நாடாளும் மக்கள் கட்சியின் சார்பில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்திருந்த வேட்பாளர் பரமசிவன் நேற்றுமுன்தினம் திடீரென அ.தி.மு.கவில் இணைந்தார்.

அ.தி.மு.க. கூட்டணியில் தென்காசி தொகுதியில் போட்டியிடும் சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் நடிகர் சரத்குமாரை ஆதரித்துப் பிரசாரம் செய்யப்போவதாகவும் அறிவித்தார்.

வேட்புமனு பரிசீலனை முடிந்து தொகுதியில் வேட்பாளர்கள் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் திடீரென ஒரு வேட்பாளர் வேறு கட்சியில் சேர்ந்துள்ளமை தென்காசியில் பேசப்படும் விடயமாக ஆகியுள்ளது. (201)

# ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் நலத் திட்டங்கள் நிறுத்தப்படும்

## இப்படிக் கூறுகிறார் திருமாவளவன்

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் அனைத்து நலத் திட்டங்களும் நிறுத்தப்பட்டுவிடும், என, திருமாவளவன் கூறியுள்ளார்.

திருவள்ளூரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

நலத் திட்டங்களைச் சொல்லி தி.மு.க., கூட்டணி வாக்குக் கேட்கிறது. நல்லாட்சி தந்த முதல்வரை திட்டி வாக்குக் கேட்கிறது அ.தி.மு.க., கூட்டணி.

தமிழகத்தில் சமூகநீதி குறித்து விஜயகாந்த், ஜெயலலிதா பேசி வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு சமூகநீதி என்றால் என்னவென்று தெரியாது. தலித் அமைப்பான விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினருக்கான இரண்டு ஆசனங்கள் கொடுத்து கௌரவித்தவர் முதல்வர்.

திருமண நிதியுதவித் திட்டத்தை வழங்கியவர் கருணாநிதி. அந்தத் திட்டத்தை நிறுத்தியவர் ஜெயலலிதா. அவர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அனைத்து நலத் திட்டங்களும் நின்றுவிடும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (201)

# ஐ.பி.எல். கொண்டாட்டம் நாளை ஆரம்பம்

டெல்லி,ஏப் 7

உலகக் கிண்ணத்தை வென்ற சூட்டோடு சூடாக இந்திய அணி வீரர்கள் ஆளுக்கு ஒரு அணியாகப் பிரிந்து நாளை முதல் மே மாதம் 22 ஆம் திகதி வரை நான்காவது ஐ.பி.எல் தொடரில் அதிரடி வேட்டையில் குதிக்கவுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணி உலகக் கிண்ணம் வென்ற கொண்டாட்டங்கள் இன்னும் கூட முடியவில்லை. அந்தச் சூடே இன்னும் ஆறாத நிலையில், நாளை ஐ.பி.எல் 4 ஆம் பருவகாலம் தொடங்குகின்றது.

74 போட்டிகளுடன் 51 நாள்கள் நடைபெறவுள்ள இந்த ரி-20 திருவிழாவை கண்டு களிக்க, கோடான கோடி கிரிக்கெட் ரசிகர்கள் தயாராகி விட்டனர்.

நாளை தொடங்கும் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியனான டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதவுள்ளன. (15)



# பரீட்சை; பயமாக இருக்கிறது

- முரளிதரன்

இலங்கையின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன், இந்த வருடம் இங்கிலாந்து பிராந்திய போட்டிகளில் விளையாடுவதற்கான விஸா பெறுவதில் சிக்கலை எதிர்நோக்குகிறார். கணினி மற்றும் பரீட்சை குறித்து அவருக்குள்ள அச்சமே இதற்கான காரணமாகும். இங்கிலாந்தின் குளோசெஸ்டஷயர் பிராந்திய அணிக்காக எதிர்வரும் ஜூன் மாதம் விளையாட முரளிதரன் திட்டமிட்டுள்ளார்.

எனினும், பிரித்தானிய தொழில் விஸா பெறுவதற்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிகளின்படி முரளிதரன் இங்கிலாந்தில் விளையாடுவதற்கான அனுமதி பெற வேண்டுமானால் அவர் தனது ஆங்கில மொழித் திறமையை வெளிப்படுத்துவதற்கான பரீட்சையொன்றை கணினி மூலம் எழுத வேண்டும்.

'2013 ஆம் ஆண்டு வரையான பயண விஸாவை நான் கொண்டுள்ளேன். ஆனால் அங்கு வேலை செய்வதற்கு பரீட்சையொன்றை எழுத வேண்டும்' என முரளிதரன் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கூறியுள்ளார். கணினி குறித்து தான் அச்சமடைவதாகவும் அவர் தெரிவித்தார். எனக்குப் கணினியை எப்படி பயன்படுத்துவது எனத் தெரியாது' என்றார் அவர்.

அவர் பயப்படுவது பரீட்சைக்காக, கணினிக்கா என கேட்டபோது, இரண்டும் என முரளி பதிலளித்தார்.

'இறுதியாக நான் 1988 ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றி 6 பாடங்களில் சித்தி பெற்றேன்.அதன்பின் நான் பாடசாலையைவிட்டு விலகினேன். பின்னர் கிரிக்கெட் விளையாடுவதையே நான் விரும்பினேன்' என்றார் முரளி.

இந்த மாதம் தனது 39 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ள முரளிதரன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியுடன் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. டெஸ்ட் போட்டிகளில் அவர் 800 விக்கெட்டுகளையும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 534 விக்கெட்டுகளையும் அவர் வீழ்த்தியுள்ளார்.

கணினிகள் மீது முரளி அச்சம் கொண்டிருந்தாலும் ஆயிரக்கணக்கான சிறார்கள் தகவல் தொழில்நுட்பக் கல்வியை பெறுவதற்கு முரளி உதவுகிறார். அவர் நடத்தும் பல நலநிதியங்கள் தகவல் தொழில்நுட்பக் கல்வி, பாடசாலைகளை இயக்குதல், வறிய சிறார்களுக்கு புத்தகங்கள் சீருடைகள் முதலானவற்றை விநியோகித்தல் என்பனவற்றுக்கு உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

20,000 சிறார்களுக்கு பாடசாலை புத்தகங்கள், சீருடைகள், பாதணிகள், மற்றும் பொருள்களை விநியோகிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் எனக்கு 100,000 அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது' என முத்தையா முரளிதரன் கூறியுள்ளார். வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்களிடமும் நலன் விரும்பிகளிடமும் நிதி திரட்டுவதற்காக ஆஸ்திரேலியா, மலேஷியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்யவும் அவர் திட்டமிட்டுள்ளார். (15)

# இந்திய வீரர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இலவச விமானப் பயணம்!

டெல்லி,ஏப் 7

உலகக் கிண்ணத்தை வென்ற அணியில் இடம்பெற்றிருந்த இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் 'கிங் பிஷர்' விமானத்தில் இலவசமாகப் பயணம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. வீரர்கள் மட்டுமின்றி, அவர்களின் மனைவி மற்றும் குழந்தைகளும் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

'கிங் பிஷர்' விமானம் செல்லும் அனைத்து வழித்தடங்களிலும் பயணம் செய்யலாம் என 'கிங் பிஷர் எயார் லைன்ஸ்' நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சர்வதேச அளவிலான பயணமும் மேற்கொள்ளலாம்.

எல்லா விமானத்திலும் முதல் வகுப்பில் (ஏசி) பயணம் மேற்கொள்ளலாம். சில வழித்தடங்களில் இயக்கப்படும் விமானங்களில் முதல் வகுப்பு இல்லாவிட்டால், அதில் இருக்கின்ற அதிகபட்ச வகுப்பில் பயணம் செய்துகொள்ளலாம் என்று 'கிங் பிஷர்' தெரிவித்துள்ளது. (15)

# இனிய நினைவுகளுடன் விடைபெறுகின்றேன்



மும்பை,ஏப் 7

இனிய நினைவுகளுடனும், கனத்த இதயத்துடனும் பிரியா விடைபெறுவதாக இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஹரி கிரிஸ்டன் தெரிவித்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த ஹரி கிரிஸ்டன் ஓய்வுபெற்றார். அவருக்குப் பிரிவு உபசார விழா மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் பங்கேற்ற ஹரி கிரிஸ்டன் கூறியதாவது:

என் வாழ்க்கையின் மிக மகிழ்ச்சியான தருணங்களில் இதுவும் ஒன்று. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும். உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று நினைத்தோம். அந்த இரண்டையுமே சாதித்துவிட்டோம். டோனி மிகச்சிறந்த அணித்தலைவர். அவருடன் கடந்த 3 ஆண்டுகள் இணைந்து பணியாற்றியதைக் கௌரவமாகக் கருதுகிறேன்.

முன்னதாக நிகழ்ச்சியில் பேசிய அவர், கனத்த இதயத்தோடு விடைபெறும் தருணம் இது. இந்தியா எப்போதும் எனது நினைவில் இருக்கும். அடிக்கடி இங்கு வந்துபோவேன். என்னையும், எனது குடும்பத்தையும் அரவணைப்போடு ஏற்றுக்கொண்ட மிக அழகான இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு வீரராக தென்னாபிரிக்காவுக்கு கிண்ணத்தை வென்று கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அது நடக்கவில்லை. பயிற்சியாளராக கிண்ணத்தை வென்று கொடுத்தது எனது வாழ்வின் இரண்டாவது சிறந்த நிகழ்வு. இது வியக்கத்தக்க சாதனை. பயிற்சியாளர் என்ற அனுபவமே இல்லாமல் பயிற்சியாளராகப் பணியைத் தொடங்கியது இனிமையான நிகழ்வு. வீரர்களிடையே நம்பிக்கையான சூழலை ஏற்படுத்தியதே வெற்றியின் ரகசியம் என்றார்.

உலகக் கிண்ணம் குறித்துப் பேசிய அவர், கடைசி 3 ஆட்டங்களில் வீரர்கள் மிகச்சிறப்பாக களத்தடுப்பில் ஈடுபட்டனர். அதைப் பார்த்து மிகுந்த ஆச்சரியம் அடைந்தேன். மிகக் கடினமாக உழைத்ததாலேயே அவ்வாறு களத்தடுப்பு செய்ய முடிந்தது என்றார். வேகப்பந்து வீச்சு மிகுந்த கவலையளிப்பதாகத் தெரிவித்தார். எப்போதும் பந்துவீச்சு மோசமாகவே உள்ளது. இன்னும் பல ஆண்டுகள் விளையாடக் கூடிய ஒன்று அல்லது இரண்டு சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் தேவை.

பயிற்சியாளர் பதவியை நீடிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது, அதை மறுத்த ஹரி கிரிஸ்டன் எந்த அணிக்கும் பயிற்சியாளராக செல்வதற்கு திட்டம் எதுவும் இல்லை. இப்போது எனது குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிட விரும்புகிறேன். தென்னாபிரிக்கா திரும்பியதும் குடும்பத்தினருடன் சில காலம் நேரத்தை செலவிடுவேன். அதன் பிறகே எதிர்காலம் குறித்து முடிவு செய்வேன். அதிர்ஷ்டம் இருந்தால் மீண்டும் பயிற்சியாளராவேன் - என்றார். (15)

# சங்கா, மஹேல இருவரும் பதவி விலகினர்

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் சங்கக்கார மற்றும் பிரதித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

அதே வேளை எதிர்வரும் இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய தொடர்கள் வரை தேர்வுக்குழுவினர் விரும்பினால் டெஸ்ட் அணிக்குத் தலைமை தாங்கத் தயார் என சங்கக்கார அறிவித்துள்ளார்.

''தற்போதைக்கு போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் திட்டமில்லை எனவும், இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு நான் விளையாடுவேன்'' எனவும் அவர் கூறியுள்ளார்.

உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் இந்தியாவிடம் இலங்கை அணி தோல்வியுற்றுச் சில தினங்களில் குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர். எனினும் இந்தத் தீர்மானம் 2011 உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டதாகும் என்று அவர்கள் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

சங்கக்கார கடந்த திங்கட்கிழமையும், மஹேல ஜெயவர்த்தன நேற்றும் தமது பதவி விலகல்களை அறிவித்துள்ளனர். ஆனால் இருவரும் அணியில் சாதாரண வீரர்களாகத் தொடர்வர் என்று தெரிவித்துள்ளனர். (15)

# இலங்கை தேர்வாளர்களும் இராஜினாமா

தேசிய கிரிக்கெட் அணிக்கு வீரர்களைத் தேர்வு செய்யும் அரவிந்த டி சில்வா தலைமையிலான தேர்வாளர் குழு இராஜினாமா செய்துள்ளனர்.

இந்தத் தகவலை இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நேற்று அறிவித்தது. அத்துடன் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயும் இதனை உறுதிப்படுத்தினார்.

இலங்கை அணி பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய அணியிடம் தோல்வியடைந்தது. இதில் இறுதியாட்டத்துக்கு இலங்கை அணி வீரர்களை தேர்வு செய்தமை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. குறிப்பாக தேர்வாளர்கள் லஞ்சம் வாங்கி வீரர்களை அணிக்குத் தேர்வு செய்தனர் என்றும் குறிப்பிடப்பட்டது.

இதனையடுத்து அரவிந்த டி சில்வா தலைமையிலான தேர்வாளர்கள் குழு தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளது.

கடந் த வருடம் மே மாதம் பதவியேற்ற தேர்வாளர்கள் குழுவின் பதவிக்காலம் இந்த மாத இறுதியுடன் முடிவடையவுள்ளது.

இந்தத் தேர்வாளர்கள் குழுவில் அரவிந்த டி சில்வா, ரஞ்சித் பெனாண்டோ, அமல் சில்வா, சபீர் அஸ்கர் அலி ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

புதிய தேர்வாளர்கள் நியமிக்கப்பட்ட பின்னரே இங்கிலாந்துக்கான சுற்றுலாவுக்கான இலங்கை அணி தெரிவு செய்யப்படும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்தார். (15)




வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் புது வருடத்தை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

புதுவருடப் பிறப்பு தினமான 14ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு மூலவர் அபிஷேகமும், காலை 8.30 மணிக்கு ஸ்ரீ இரங்கநாதர் அபிஷேகமும், முற்பகல் 10.15 மணிக்கு காலை சந்திப் பூசையும், முற்பகல் 11.33 மணிக்கு வருடப்பிறப்பு விஷேட பூசையும், முற்பகல் 11.45 மணிக்கு ஆதி வேங்கடேசர் உற்சவமும் இடம்பெறும். (ற-313)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில 15 வருடங்களாக சிறந்த மாணவர்களை உருவாக்கிவரும் தனியார் பாடசாலை. No. 426, (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். Tel:- 0776751649.

* * *

சங்கானை அரசடி வைரவர் ஆலயத்தின் சங்காபிஷேகத் திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந்த சங்காபிஷேகத் திருவிழாவின் போது கும்பாபிஷேகத் தின மணவாளக் கோலமும் இடம்பெறும். (ற-313)

* * *

மாதகல் நுணசை முருக மூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ம)

## சேவையை உவகையுடன் வாழ்த்துகின்றோம்



**திருமதி மஞ்சுளா சிவராஜா**
**(B.A, Dip. in Edu) அவர்கள்**
கல்விச் சேவையில் ஆசிரியப் பணியாற்றி கடந்த 28.02.2011 அன்று ஓய்வுபெற்றுள்ளார் ஆசிரியையின் சேவையை உவகையுடன் வாழ்த்துவதுடன் இறைவனின் ஆசிகள் என்றும் அவருடன் இருக்க வேண்டி நிற்கின்றோம்.

(40)(3029)
ஆசிரியர் கழகம்,மாணவர்கள்
யா/பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தவமணி கணபதிப்பிள்ளை



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் இல, 131, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலை இருப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவமணி கணபதிப்பிள்ளை 02.04.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி -பொன்னி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான நாகன் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் சர்வோதயா வீதி, ஆவரங்காலைச் சேர்ந்த நா.கணபதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும்காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை, ஐயாத்துரை, தம்பிஐயா, இராசதுரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தனபாக்கியம், பூமணிதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பாஸ்கரன் (சுவிஸ்), மாலினி (ஜேர்மனி), ஞானசேகரம் (சுவிஸ்), நளினி, (கோண்டாவில்), சுபாசினி(ஜேர்மனி),பிரபாகரன் (சுவிஸ்), சாமினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அன் (சுவிஸ்), சின்னத்தம்பி (ஜேர்மனி), ரவீந்திரன் (சுவிஸ்), ரவி (ஜேர்மனி), சுகந்தி (சுவிஸ்), வித்யா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் சாமினி (கிறிஸ்ரீனா), பாவேந்தன் (அலெக்ஸ்), யாழினி (நெயோமி), சிந்துஷன், இலக்கியன், இலக்கியா, செந்தூரன், சுகிர்தன், சாரங்கன், துஷ்யா, தனுஷன், இனியா, ஆரதி, சுஜிதரன், சுபிற்ஷா, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (7.04.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (சி/577348) (19,20)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

## தம்பு நடராசா (தம்பித்துரை)

(நீர்வேலி மத்தி வைரவர் கோயில் பூசகர்)



நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை என அழைக்கப்படும் தம்பு நடராசா 03.04 .2011 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் (கண்மணி) அன்புக் கணவரும், கோகிலா, கருணா (பிரான்ஸ்), லோகேஷ் (கனடா), சர்வேஸ்வரி (கௌரி- சுவிஸ்), பிருந்தா (ஆசிரியை, புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி), சசிகாந்த் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகாந்த நாதன் (பிரான்ஸ்), குணசிங்கம்(கனடா), கமலக்கண்ணன்(சுவிஸ்) ஆகியோரின் மாமனும், பிரதீஷ், சபேஷ், சந்தோஷ், சுயந்தன், தீபிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், வன்னியசிங்கம் (செல்வம்), இராஜ்கண்ணன் ஆகியோரின் வளர்ப்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2011) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிவியாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

## ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.7

தொண்டைமானாறு கலை, பண்பாட்டுப் பேரவையினால் வாரந்தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொண்டைமானாறு ஆச்சிரம மண்டபத்தில் ''இன்னிசை நிகழ்வு'' இடம்பெறும். (ற-236)

* * *

காரைநகர் வாரிப வளவு கற்பக விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழாக்கள் நிகழ்வில் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை வரை விநாயகர் வழிபாடு, திருமுறைகள், யாகம், விரத அனுஷ்டானங்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம், சமயகுரவர்கள் காட்டிய வழி, அழித்தல், இரதோற்சவ மகிமை ஆகிய தலைப்புகளில் ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தவுள்ளார்.

திருவிழாக் காலத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கும் தேர்த் திருவிழாவின் போது முற்பகல் 10 மணிக்கும் இந்தச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. (ற-313)

## ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகளின் 63 ஆவது அவதாரத் திருநாள் விழா

கொழும்பு, தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலயத்தின் ஸ்தாபகர் ஹீமத் சந்திர சேகர சுவாமிகளின் 63 ஆவது அவதாரத் திருநாள் விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு இராமகிருஸ்ண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாரதி சிவயோகநாதனின் நாட்டியக் கலாலயா மாணவிகளின் சிவநடனமும், கொழும்பு இராமகிருஸ்ண வித்தியாலய மாணவர்களின் நடனமும் நடைபெறும். இந்த நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.


இந்த நிகழ்வில் ஆஞ்சநேயர் ஆலயத்தின் பக்திப்பாடலின்14 ஆவது இறுவட்டுவெளியீடும் இடம்பெறவுள்ளது. (204)

**English Classes**
அனைத்து Grade 5 இலிருந்து A/L படிக்கும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்கள், வயது வந்தோர், இல்லத்தரசிகள், ஆசிரியர்கள் அனைவருக்கும் வீடு வந்து அவர்களுக்கு ஏற்ற விதத்தில் ஆரம்பத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
விவரங்களுக்கு:-0772882790

**விற்பனையாளர் தேவை**
இலங்கை லொத்தர் சபையால் வெளியிடப்படும் லொத்தர் டிக்கட்டுக்களை, பருத்தித்துறை மற்றும் பருத்தித்துறையை அண்டிய கிராமப்புறங்களிலும் விற்பனை செய்ய அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை.
*தொடர்பு:-* து.கோணேஸ்வரன்
பத்திரகாளி கோயிலடி,பருத்தித்துறை.
T.P: 0779698994.

**பெயர் மாற்றம்**
இதுவரை காலமும்
வள்ளிப்பிள்ளை
என அழைக்கப்பட்ட எனது பெயரினை வற்சலா என மாற்ற விரும்புகின்றேன். இன்றிலிருந்து (07.04.2011) சகல ஆவணங்களிலும் ச.வற்சலா என கையொப்பம் இடுவேன்.
(40 20 26)(3035) - ச.வற்சலா.

தென்மராட்சி, கொடிகாமம்,
கச்சாய் றோட், கச்சாய் அரசினர்
பாடசாலைக்கு அருகில்
எதிர்கால முதலீட்டுத்
திட்டத்துக்கு ஏற்றவகையில்
பெரிய நிலப்பரப்பு
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ள:-
0750476078, 0772021691, 0247911178.




**மணமகன் தேவை**
யாழ்.இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் 73 இல் பிறந்த பூசமும் 1இல் செவ்வாயுமுடைய 5'1"உயரமான மெல்லியசிவந்த மணமகளுக்கு வெளிநாட்டு வதிவுடைமையுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(3027)(41) தொடர்பு:- 0771250352

**வேலையாள் தேவை**
ஐஸ்கிறீம் வான் ஓடுவதற்கு அனுபவம் உள்ள சாரதியும் விற்பனையாளரும் தேவை. T.P:- 0777482695 (3028)(41)

**சித்திரை புத்தாண்டு சிறப்புச்சலுகை**
60%-75% புதுவருடத்தை முன்னிட்டு அனைத்து கணனி பாடநெறிகளுக்கு வரை விசேட கட்டணக்கழிவு. இச்சலுகை 20 April வரை மட்டுமே.

ADDP Advanced Diploma in Digital per-press 3 Months
DVP Diploma in Digital Video Production 3 Months
DPCA Diploma in Cartoon Animation 3 Months
MASD Master Diploma in Multimedia 12 Months

**ASIAN COMPUTER EDUCATION**

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399 | 230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267 |

## நெஞ்சம் மறவாத 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
18 . 09 . 1929



அரன் திருவடியில்
08 . 03 . 2011

அமரர்
# சிவசம்பு தனபாலசிங்கம்
(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு இணைப்பாளர்)

கடந்த 08.03.2011 இறையடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.04.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

மேலும் எமது ஞாபக சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் நாம் அழைக்கத் தவறி இருப்பின் அதனைப் பெருமனதுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

கந்தரோடை,
(புதைபொருள் ஆராய்ச்சி நிலையம் அருகில்)
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# வரி விதிப்புக்களைப் பிற்போடுமாறு கிளிநொச்சி வர்த்தகர்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஏப்.7

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி விதிப்புக்களை எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே தங்களிடம் மேற்கொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகாலத்தில் ஏற்பட்ட யுத்தம், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வு என்பவற்றின் காரணமாகத் தாங்கள் முதலீடுகளை இழந்துள்ளதாகவும் இந்த நிலையில் மீளவும் தங்கள் வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குப் பல்வேறு வழிகளிலும் கடன்களைப் பெற்று, அதனைக் கொண்டு வணிக நிலையங்களின் கட்டடங்கள் அமைத்தல், புனரமைத்தல், தளபாடங்கள் கொள்வனவு செய்தல் போன்ற செலவுகளைச் செய்து தமது வணிக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

இந்த மாவட்டத்தில் உள்ள மக்களும் என்றுமில்லாதவாறு துன்பங்களை அனுபவித்தவர்கள். தற்போது தொழில் வாய்ப்புக்கள் இன்றியே அநேகமானோர் உள்ளனர். இந்த நிலையில் வியாபாரமும் கடந்த காலங்களைப் போல் இல்லையென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தேவை கருதியே தங்களுடைய வருமானங்களை அதிகமாகக் காட்டி வங்கிகளில் கடன்களைப் பெற்றுக் கொண்டதாகவும் தற்போது கிடைக்கும் வருமானம் யாவும் வட்டிகளுக்கும் தாங்கள் பெற்ற கடன்களை அடைக்கவும் பயன்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் வரி விதிப்பனவுகள் தொடர்பாகத் தங்களுடன் கதைப்பது மிகவும் வேதனையாக உள்ளது. இந்த வரி விதிப்பனவுகளை எதிர்வரும் ஐந்து ஆண்டுகளின் பின்னர் மேற்கொள்ளுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## பிஞ்சுகளின் ஆர்வம்...



அறிவு வளரட்டும்: கிளிநொச்சி கனகபுரம் றோயல் முன்பள்ளிச் சிறார்கள் தமது கல்விச் சுற்றுலாவின்போது உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு வருகை தந்திருந்தனர். (6)

# வரி விதிப்பனவு தொடர்பான கருத்தரங்கு கிளிநொச்சியில்

கிளிநொச்சி,ஏப்.7

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தால் வரி விதிப்பனவு தொடர்பான கருத்தரங்கு ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

கடந்த 3 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய அலுவலகத்தைச் சேர்ந்த வரி உத்தியோகத்தர் சுதாநிதி தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் வரிகள் தொடர்பான கருத்துகளையும் வரி செலுத்த வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிபதி கே.எம்.எஸ்.கந்தகெதர, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் பிரதி ஆணையாளர் பாலசுந்தரம் சிவாஜி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த பந்துல ஆகியோர் கருத்துகளையும் விளக்கங்களையும் வழங்கினர்.

வரி செலுத்த வேண்டிய மட்டத்தில் வருமானத்தைப் பெறும் ஒவ்வொருவரும் வரிக்கோவைகளை ஆரம்பிக்கவேண்டும் எனவும் அதன் பொறுப்பைத் தாம் நினைவூட்டுவதாகவும் இந்த மாதத்தில் இருந்து வரி செலுத்த வேண்டும் எனவும் சுயமாக வருமான வரி செலுத்துவதற்கு எவராவது முன்வரும் போது கடந்த வருடங்களின் வருமானங்கள் தொடர்பாக எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படமாட்டாதெனவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வர்த்தகர்கள், பொதுமக்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-6)

# வவுனியாவில் நான்கு கிராமங்களில் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டுத் திட்டம்

வவுனியா மாவட்டத்தில் உள்ள சிதம்பரபுரம், முருகனூர், ஆச்சிபுரம், கோவிற்குளம் பகுதிகளில் டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டம் கடந்த வாரம் அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் பல்வேறு அரச, அரச சார்பற்ற தொண்டர்கள் உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் மக்கள் குடியிருக்காத காணிகளில், கழிவுகள், குப்பைகள், பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் பொருள்கள் என்பன அதிகளவில் காணப்பட்டு, அண்மையில் பெய்த மழையின் காரணமாக மழைநீர் தேங்கி. நுளம்புப் பெருக்கத்துக்கு வழி வகுத்துள்ளது. இது தொடர்பாகச் சமூக மட்டப் பிரதித் தொகுதிகள் மற்றும் கிராம சேவையாளர்களுக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஊடாகத் தெரிவிக்கப்பட்டு, இவற்றைச் சுத்தம் செய்வதற்கு அவர்கள் ஊடாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதையடுத்தே இவை சுத்தம் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், கடந்த இரண்டு வாரங்களில் பெருமளவு வீடுகள், பொது நிறுவனங்கள் மற்றும் தொழில் ஸ்தாபனங்கள் என்பனவற்றில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பல இடங்களில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் காணப்பட்டன. இவற்றைத் துப்புரவு செய்வதற்கு ஓரிருநாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவற்றைச் செய்யத்தவறின் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

பொது மக்களால் சேகரிக்கப்படும் கழிவுகளைப் பொதுவான இடத்தில் இதற்கென அமைக்கப்பட்ட பிரதேசத்தில் கொட்டினால் உள்ளூராட்சி மன்ற வாகனங்கள் ஊடாக இவற்றை விரைவில் அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் எனவும் அந்தப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கும் வீட்டுச் சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருப்பது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பாடசாலைகளிலும் சிரமதான நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இந்தச் செயற்பாடுகள் இந்த வாரமும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (க-501)

# உழவு இயந்திர உரிமையாளர் சங்கம் கிளிநொச்சியில் தெரிவு

கிளிநொச்சி, ஏப்.7

உழவு இயந்திர உரிமையாளர்களினதும் பாவனையாளர்களினதும் நன்மை கருதி கிளிநொச்சியில் உழவு இயந்திர உரிமையாளர் சங்கம் கடந்த 4 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் மணலைப் பெறுவதில் மக்கள் படும் சிரமங்களில் அதிக பங்கை வகிப்பது உழவு இயந்திரங்களின் கட்டண அதிகரிப்புத்தான். அத்துடன், அதிகமான உழவு இயந்திர உரிமையாளர்கள் அதிகூடிய அடிப்படையிலும் கடன் அடிப்படையிலும் உழவு இயந்திரங்களைக் கொள்வனவு செய்துவிட்டு அதற்கான வேலை வாய்ப்புகள் எதுவுமின்றிப் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மேலும், அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்கள் ஊடாக வருகின்ற அபிவிருத்திப் பணிகளுக்குக் குறிப்பிட்ட சில உழவு இயந்திரங்களே பயன்படுத்தப்படுகின்றன.

இதுபோன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் இந்த உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பரந்துபட்ட வகையில் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-6)

# மாங்குளம் ம.வி. படையினரால் பாடசாலைச் சமூகத்திடம் ஒப்படைப்பு

இராணுவத்தினரின் பாவனையில் இருந்த முல்லைத்தீவு மாங்குளம் மகாவித்தியாலயம் கல்விச் செயற்பாடுகளுக்காகப் பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் மக்கள் மீளக் குடியமர்வு செய்யப்பட்ட முல்லைத்தீவு, மாங்குளம் பிரதேசத்தில் உள்ள மாங்குளம் மகாவித்தியாலயம் ஒரு வருடத்துக்கும் மேலாகப் படையினரின் முகாமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஏ-9 வீதியின் பாடசாலையின் முன்பக்கம் துண்டிக்கப்பட்டு மாற்றுவழிப்பாதை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினிடமும்முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அத்துடன், மாங்குளம் ம.வி. பிறிதோர் இடத்தில் போதிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்குவதா?அல்லது மூடுவதா? என்ற நிலையில் காணப்பட்டது.

தற்போது கடந்த மாதம் நடுப்பகுதியில் இந்தப் பகுதியில் முகாம் அமைத்து நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டு பாடசாலைக் கட்டடத்தொகுதி, விளையாட்டு மைதானம், அதனை அண்டிய பகுதிகளில் இருந்த பொது மக்களின் காணிகள் என்பன உரிய வர்களிடம் கையளிக்கப்பட்டன. கல்விச்செயற்பாடுகளும் குறித்த பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் காணப்பட்ட மண் அணைகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# மன்னாரில் ஓகஸ்ட் மாதம் எண்ணெய் அகழ்வுப் பணி

வவுனியா, ஏப்.7

மன்னாரில் எண்ணெய் அகழ்வுப் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப் படவுள்ளன என்று கனியவளங்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றின் உதவியுடன் முதற்கட்ட எண்ணெய் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆரம்பத்தில் மூன்று எண்ணெய்க் கிணறுகள் மட்டுமே தோண்டப்படவுள்ளன.

அதன் பின்னர் மன்னார் எண்ணெய்ப்படுக்கையில் கிடைக்கும் எண்ணெய் வளத்தைப் பொறுத்து மேலதிக கிணறுகள் தோண்டுவது குறித்துக் கவனத்தில் எடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்த எண்ணெய் அகழ்வுப் பணிகள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே ஒவ்வொரு நடவடிக்கையும் அமைந்துள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


# விவசாயத்தோட்டத்துக்கு முதலிட

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள விவசாயத் தோட்டம் முல்லைத் தீவு மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் பாடசாலையின் விவசாயத் தோட்டம் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் முயற்சியால் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பாடசாலை அதிபர் பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றார். பாடசாலை வளாகம் கடந்தவருடங்களாகக் காடாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தது. தற்போது புல் டோசர் மூலம் இவையெல்லாம் அழிக்கப்பட்டுத் துப்புரவுசெய்யப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலைக்கான விவசாயத் தோட்டத்தை அமைப்பதற்கான ஏதுநிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாடசாலைச் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர். (க-500)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
20.07.1958

மறைவு:
20.03.2010

## அமரர் நடேசு கிருஸ்ணகுமாரன்

(பொலிஸன்)

திதி: சதுர்த்தி (07.04.2011)

உன் உணர்வுகள்
உன் தீர்மானங்கள்
என்றும் மதிப்பார்ந்தவை!

உன் கடின உழைப்பு
உன் குடும்பப் பொறுப்பு
என்றும் உதாரணமானவை!

உன் அழகும்
உன் இளமையும்
என்றுமே பேசப்படுபவை!

உன் வாழ்வும்
உன் வளமும்
என்றுமே நேர்மையானவை!
உன் மரணமும்
உன் மாற்றமும்
என்றுமே வெற்றிடம் தான்;
என்றுமே ஏமாற்றம் தான்!

'ரோவர்', நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு.

- குடும்பத்தினர்.

(48,20)

# கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்குப் புதிய கட்டடம்

கொடிகாமம் பிரதேச வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவுக்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை எழுதுமட்டுவாழ், கரம்பகம் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க சுகாதார அமைச்சால் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் இந்தக் கட்டடங்கள் அமைக்கக் காணியை அன்பளிப்பாக சுகாதார அமைச்சுக்கு வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளுமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ஐ-207)


## மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்

(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

பேசியல், மேக்கப், மணப்பெண் அலங்காரம், சாறி டிசைனிங், ஸ்ரெயிட்னிங், பேமிங், திரெட்டிங், வக்சிங், ஸ்மூத்திங், பெடிக்கியூ, மெனிக்கியூர், ஹெயாக்கலறிங், நெயில்ஆர்ட், பிளக்ஸ் பொட்ட ட்ரீற்மென்ட்,ஹெயார் றீட்மென்ட், சாறிவேக்ஸ், கேக் ஐசிங், தையல் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

(அனுமதிக்கட்டணம் 1000 /=)

ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

* பயிற்சிநிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.



T.P: 0213214013,
0779362642.

வீரபத்திரர் கோயில்,
கோப்பாய்.

(49,20,23)


உ



## பீமரத சாந்தி வைபவ அழைப்பு

அன்புடையீர்!..

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வமங்கள விகிர்தி வருடம் பங்குனி மாதம் 24ஆம் திகதி (09.04.2011) சனிக்கிழமை மிருகசீரிட நட்சத்திர சுப தினத்தில் **எமது பெற்றோர்**

**பிரம்மஸ்ரீ வெ.சுப்பிரமணிய ஐயர் ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மா**

**தம்பதியருக்கு**

பீமரத சாந்தி வைபவம்

சாவகச்சேரியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அவ்வேளை தாங்கள் பந்து மித்திர சகிதம் சமுகம் தந்து வைபவத்தைச் சிறப்பித்து அவர்களது ஆசீர்வாதத்தையும் பெற்று எம்மை மகிழ்விக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன்
கோயில் அருகில், ஸ்ரேசன் வீதி,
சாவகச்சேரி. T.P: 0213205994.

பிள்ளைகள்.


(49,20,23)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

## லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா

மண்ணில்
18.08.1952

விண்ணில்
08.03.2011



எங்கள் அக்கா வீட்டு சிங்கத்தின்
குரல் ஓய்ந்து விட்டது
அது நிரந்தரமாகவே ஓய்ந்துவிட்டது
அந்தக் குரலுக்காக ஏங்கும்
எங்கள் அன்பு அக்கா, பிள்ளைகளுடன்
நாமும் எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

மட்டுவில் உன் பிறப்பிடம்
தெல்லிப்பழை (விராங்கோடை) உன்
இல்லாளை துணை கொண்ட இடம்
உடுவில் நீ உழைப்பால் உயர்ந்து
சமூக அந்தஸ்தும் , அடையாளமும் கொண்ட இடம்
நீ சமூகத்துக்கும், பிறருக்கும் எவ்வளவு
உதவியாக இருந்தாய் என்பதை
உன் இறுதி ஊர்வலமே உறுதி செய்தது

உன் அன்புக்காக, பாசத்திற்காக
அரவணைப்புக்காக, ஆதரவிற்காக
ஏங்கி அழும் எங்கள் அக்கா குடும்பத்துடன்
நாமும் அழுகின்றோம்; தவிக்கின்றோம்
எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்கி அஞ்சலிக்கின்றோம்!
ஆறாத்துயரில் இருக்கும் எங்கள் அக்கா குடும்பத்துக்கு
ஒரே ஓர் ஆறுதல் வார்த்தை.......

எங்கள் அத்தானின் இழப்பு ஈடுசெய்யப்படமுடியாதது.
அது எப்போதுமே நிரந்தா இடைவெளிதான்
ஆனாலும் நாங்கள் இருக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



மச்சான்மார்:-

ஜெயக்குமார், நந்தகுமார், சுவீந்திரகுமார்

(49,26,19)

# வடக்கின் கடலோரக் கிராமங்களின் அபிவிருத்திப் பணிகள் ஜூலை ஆரம்பம்

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.7

வடக்கின் கடலோரக் கிராமங்கள் அனைத்திலும் எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

மாதகல் பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட 150 குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகள் தொடர்பாகச் சண்டிலிப்பாயில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கின் கடலோரக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் கடற்றொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்டு ஈடுபட்டு வருகின்ற நிலையில் அவர்களது வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அனைவரிடமும் உள்ளது.

குறிப்பாக மாதகல் பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையிலேயே மாதகல் பிரதேசம் மட்டுமல்லாது, வடக்கின் கடலோரக் கிராமங்கள் அனைத்திலும் ஜூலை மாதம் தொடக்கம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-313)

# நிரந்தரப் பொதுச்சந்தை இன்றி சண்டிலிப்பாய் மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7

சண்டிலிப்பாயில் நிரந்தரமான பொதுச்சந்தை இல்லாமையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிக்கு முன்பாகக் கடந்த பல வருடங்களாகப் பொதுச்சந்தையொன்று மக்கள் சந்தை என்ற பெயரில் திறந்துவைக்கப்பட்டது.

தற்போது அந்த வளாகம் சுற்றுவேலி அடைக்கப்பட்டுள்ளதால் மீன் வியாபாரிகள், மரக்கறி வியாபாரிகள் வீதியோரத்திலிருந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தபோது மீண்டும் அவ்விடத்திலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். இதனால் சண்டிலிப்பாய் மத்தியில் உள்ள நந்தன் மைதானத்தில் அவர்கள் தற்காலிகமாக வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இங்கு நிரந்தரமான சந்தையொன்று இல்லாததால் கல்வளை, சண்டிலிப்பாய் மத்தி, தொட்டிலடி, மடத்தடி, சண்டிலிப்பாய் மேற்கு ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பொருள்களை வாங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக வலி.தென்மேற்குப் பிரதேச சபை யினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

# திருத்தப்பட்டு சேவைக்கு வந்து மறுநாளே பழுதடைந்த 'குமுதினி'

நெடுந்தீவு, ஏப்.7

நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் உள்ள குமுதினிப் படகு திருத்தம் செய்யப்பட்டு வரும் ஒவ்வொரு தடவையும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இரண்டொரு தினங்களில் மீண்டும் பழுதடைந்துவிடுகிறது.

இந்தப் படகு பழுதடையும் போதெல்லாம் கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுத் திருத்தம் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் குமுதினி படகுச் சேவை அடிக்கடி சீர்குலைவதால் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஆளுநர், அமைச்சர், அரச அதிபர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-7)

## தாக்குதலுக்கு இலக்கான நபர் உயிரிழப்பு

வாய்த்தர்க்கத்தையடுத்து மூண்ட கைகலப்பில் படுகாயமுற்றார் எனக் கூறப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார். கொக்குவில் பிரம்படி மில் வீதி இரண்டாம் ஒழுங்கையைச் சேர்ந்ததிலிப் ஜெயநாயகம் (வயது-65) என்பவரே மரணமானவர் ஆவார்.

நேற்று முன்தினம் மாலை உறவினர்களி டையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து குறித்தநபரை சைக்கிளுக்கு காற்றடிக்கும் பம்பினால் தாக்கியமையால் படுகாய மடைந்தார் எனக் கூறப்பட்டது. பொலிஸ் விசாரணைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-78-323)

## நிறைவின் நினைவுகள்...




யாழ். செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 29 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரை நிகழ்த்துகிறார். மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

# பெண்கள் மீதான துஷ்பிரயோகம் அதிகரிக்க சரியான வழிகாட்டல் இன்மையே காரணம்

யாழ்ப்பாணம், ஏப் 7

பெண்கள் மீதான துஷ்பிரயோகம் அதிகரித்துக் காணப்படுவதற்கு வீட்டிலுள்ள பெரியோர்களின் சரியான வழிகாட்டலின்மையே காரணமாகும் என்று யாழ். மாவட்ட தாய், சேய்நல வைத்திய அதிகாரி திருமதி சிவசங்கர் திருமகள் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலகத்தில் யாழ்.பிரதேசசெயலர் திருமதி தெய்வேந்திரம் சுகுணரதி தலைமையில் நடைபெற்ற மகளிர்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

பெண்கள் மீது திணிக்கப்படுகின்ற வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், அடக்குமுறைகள் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கட்டவிழ்க்கப்பட்டுள்ளன என்பதையே இவ்வருடம் மார்ச் 8ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட இந்த நூறாவது மகளிர் தின விழா எமக்கு உணர்த்தியுள்ளது.

அதே அடக்கு முறைகள், துஷ்பிரயோகங்கள் இன்னும் தான் குறையவில்லை. தொடர்கதையாக நீண்டுகொண்டு போவதால் பெண்கள் மீது ஏற்படுத்தப்படுகின்ற துஷ்பிரயோகங்கள் சொல்லித் தீரப்போவதில்லை.

இத்தகைய துஷ்பிரயோகத்துக்கு வீட்டிலுள்ள பெரியோர்கள் சரியான முறையில் அறிவுறுத்தல்களை வழங்காமல் வழிகாட்டாமல் இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

பெற்றோர்கள் இயந்திரமாய் இயங்கிக்கொண்டிருப்பதால் தமது பிள்ளைகளுடன் மனம் விட்டுப் பேசி அவர்களது உள்ளக் கிடக்கைகளை உணர்ந்து அதன்படி அறிவுரை சொல்லமுடியாமல் உள்ளது.

இதனாலேயே இளம் சமுதாயம் வழிதடுமாறுகின்றனர் குறிப்பாக இளம் பெண்கள் துஷ்பிரயோகங்களுக்குள்ளாகும் நிலைமாறுவதற்கு எல்லோரும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் செயலகத்தின் உத்தியோகத்தர்கள், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.(எ-9)

## தேவார இசைப் பாடல்கள் ஒரே ஒலித்தட்டில்

நல்லூர் திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகத்தினரால் தேவார இசைப்பாடல்கள் ஐந்து பாகங்களாக ஒரே ஒலித்தட்டில் வெளியாகியுள்ளன.

இதில் முதலாவது பாகத்தின் அணி இசைக் கலைஞர்களாக ச.திவாகரன், சி.துரைராஜா, கி.சிவகுருநாத சுவாமி, இரத்தினம் இரத்தினதுரை ஆகியோரும் பங்குபற்றினர். அடுத்த நான்கு பாகங்களிலும் தென்னிந்திய இசைக் கலைஞர்களான டி.எச்.வசந்தா, பி.சிவகுமார், எஸ்.றெங்கராஜன், எச். பரமசிவம், ஆர்.எஸ்.தீனதயாளு ஆகியோரும் பங்குபற்றினர்.

(204)

# சிறுவர் இல்லங்களை 24 மணிநேரமும் கண்காணிக்க நீதிவான் உத்தரவு

நெல்லியடி ஏப்.7

பருத்தித்துறை உப கதிர்காமம் சிறுவர் இல்லச் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் சிறுவர் நன்னடத்தை உத்தியேகத்தர் 24 மணிநேரமும் அங்கு தங்கி பிள்ளைகளின் பராமரிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும் என்று பருத்தித்துறை மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

இந்த இல்லம் தொடர்பான விசாரணை திங்கட்கிழமை நீதிமன்றத்தில் இடம்பெற்றது. அப்போதே நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

இந்த விசாரணையின் போது சிறுவர் இல்லத்தை நடத்தி வரும் டாக்டர் ஆனந்தகுமார் மற்றும் சிறுவர் இல்ல பெண் அதிகாரி ஜெசிந்தா ஆகியோர் ஆஜராகி இருந்தனர். இவர்களை கடுமையாக எச்சரித்த நீதிவான் இல்லத்தில் 24 மணிநேரமும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் கடமையில் இருக்க வேண்டும் என்றும் இந்த அதிகாரிகளுக்கு பாதுகாப்பாக விடுதிகளில் பொலிஸாரும் கடமையில் இருக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை இந்தக் கடவுளின் பிள்ளைகள் இல்லத்தில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை இடமாற்றம் செய்யப்பட்டு திருநெல்வேலியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்படுகிறார்கள் 26 பேரில் 18 பேர் அவர்களது பெற்றோர், பாதுகாவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சிய 8 பேரையும் அவர்களது பெற்றோர், பாதுகாவலர் விரைவில் வந்து அழைத்துச் செல்வர் என எதிர்பார்கப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது என்று யாழ் மாவட்ட சிறுவர் நன்னடத்தை திணைக் கள அதிகாரி எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

இந்தவிடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சம்பந்தப்பட்ட பெற்றோர் தமது விருப்பின் அடிப்படையில் பிள்ளைகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். சிறார்களும் இதனை ஏற்றுக்கொண்டதனால் பெற்றோர்கள் திங்கட்கிழமை தமது பிள்ளைகளை அழைத்துச் சென்றனர். இது இவ்வாறிருக்க தற்போது பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சை நடைபெற்று வருகிறது. ஒரு பாடத்தைத் தவிர ஏனைய பாடங்களுக்கான பரீட்சைகள் முடிவடைந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த 26 மாணவர்களும் இடமாற்றப் பட்டனர்.

அந்தப் பரீட்சை திங்கட்கிழமை கல்வித் திணைக்கழத்தின் சம்மதத்துடன் திருநெல்வேலியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்தில் நடத்தப்பட்டது. இதனை நன்னடத்தை திணைக்கள அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

### மேலும் 9 பேர் வதிரி ஆச்சிரமத்தில்

இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த சிறார்கள் இடமாற்றம் செய்யப்பட்ட போது 'கடவுளின் குழந்தைகள்' இல்லத்திலிருந்த 8 சிறார்களும் தாய் ஒருவரும் தம்மையும் இடமாற்றம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில் குறித்த 9 பேரும் வதிரியிலுள்ள பரமானந்தா ஆச்சிரமத்தில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர் - என்றார்

கடவுளின் குழந்தைகள் இல்லத்தில் விடுதிகள் உரிய அளவுப் பிரமாணங்களின்படி அமையாமலும் போதிய வசதிகள் இல்லாத நிலையிலும் இயங்கி வந்த நிலையில் குறித்த சிறார்கள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இடமாற்றப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4-319)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
பெண்கள் சிலரின் உதவி கிடைக்கும். கடினமாக உழைப்பீர்கள். நிதி நிலைமையில் மேம்பாடு உண்டு. பொறியியல் தொடர்பான பணியில் இருப் போர் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். எதி லும் குழப்பம் இல்லாமல் தெளிவான முடிவு எடுப்பீர்கள். பழைய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம்.

**இடபம்:**
கடன் மிகுதிகள் வசூலாவது தள்ளிப் போகலாம். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய வேலை களை ஒப்படைக்கலாம். குடும்பத்தினரின் உணர்வு களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பேராசை ஏற்படும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். சிலரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**மிதுனம்:**
நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைப்பீர்கள். நெருங்கிய உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். மருத்துவர்களுக்கு வருவாய் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக் களைப் பெறலாம். அலைச்சல் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள்.

**கடகம்:**
தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி காண்பீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி பெருமை சேர்ப் பீர்கள். உடல் நலம் தொடர்பான விடயங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்தவர்களைச் சந்திப்பீர்கள். தொடங்கிய காரியங்கள் துரிதமாக நடக்கும் நாள்.

**சிங்கம்:**
சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். வழக்கமான பணிகளைத் தங்கு தடையின்றி முடிப்பீர்கள். உறவினர்களிடம் உங்களின் பெருமை யைப் பேசுவீர்கள். தூக்கமின்மையால் சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள்.

**கன்னி:**
எந்த விடயத்திலும் அஜாக்கிரதையைத் தவிர்த்து கவனமாகச் செயற்பட வேண்டும். உங்களிடம் உதவி கள் பெற்ற சிலரே உங்களை உதாசீனம் செய்து பேச லாம். தம்பதியர் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று கடைசி நேரத்தில் முடியாமல் போகலாம்.

**துலாம்:**
அரசு தொடர்பான காரியங்கள் எதிர்பார்த்தது போல நடக்கலாம். தூரத்து உறவினர் ஒருவரை எதிர் பாராமல் சந்திக்கலாம். கடன் மிகுதி ஒன்றைத் தீர்க்க முற்படுவீர்கள். உங்களின் வேலை ஒன்றை நண்பர்கள் சிலர் மூலம் முடித்துக் கொள்வீர்கள். பிரியமானவர் களின் சந்திப்பு நிகழும். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போடலாம்

**விருச்சிகம்:**
எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பணிச்சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். சில வேலைகளைச் செய்ய திட்டமிட்டு பின்னர் அதில் மாற்றம் செய்வீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஒரு வழியில் பணவரவை எதிர்பார்க்கும் நேரத்தில், மற்றொரு தரப்பில் இருந்தும் பணவரவு வரலாம்

**தனுசு:**
இரண்டு நாள்களாக பின்தள்ளி வைத்த பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். நிலம், பூமி விவகாரங் களில் எச்சரிக்கை அவசியம். தேக ஆரோக்கிய குறைவால் தெம்பு, உற்சாகம் குறையலாம். குல தெய்வங்களை வழிபட்டு இன்பம் பெறலாம். சிலர் உங்களின் கோபத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டாலும், நீங்கள் பொறுமையாகச் செயற்பட வேண்டும்.

**மகரம்:**
மதிப்பு, மரியாதை மேம்படும். இருக்கும் பணத்தை உதவி கேட்ட ஒருவரிடம் கொடுத்து விட்டு, நீங்கள் பிறரிடம் கடன் வாங்கலாம். அதிக ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், குறைந்த அளவில் வருவாய் கிடைக்கலாம். தாய் வழி உறவுகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள்.

**கும்பம்:**
உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்ட லாம். பெண்கள் குடும்ப பெரியவர்களிடம் வாக்கு வாதங்களைத் தவிர்க்க வேண்டும். கவனக்குறை வாக எங்கோ வைத்த பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கலாம். நண்பர் களுடன் உல்லாசமாக பொழுது போக்குவதில் நாட்டம் செல்லும்.

**மீனம்:**
முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பணவரவுகள் வரும் முன்னரே செலவுகள் காத்திருக் கும். சாதகமாக நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று பாதகமாக நடக்கலாம். சங்கடம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்பி எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டாம்.

# இலங்கை விடயத்தில் மேற்குலகம் ஒதுங்கியது ஏன்?



**தாய்லாந்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இராஜதந்திரியாகப் பணியாற்றும் நெவில் டி சில்வா எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம்.**

இலங்கையிலும் இலங்கைக்கு வெளி யேயும் வாழும் தமிழர்களின் மனங் களில் கோபம் அல்லது ஏமாற்றம் அதிகரித்துக் காணப்படுகிறது.

சுதந்திரத் தமிழ்த் தாயகமாம் 'ஈழம்' என்ற தங்கள் கனவை மேற்கு நாடுகள் ஆதரித்து நிற்கும் எனத் தமிழர்கள் கருதியிருந்தனர். இந்த நிலையில் அந்த நாடுகள் போரின் இறுதியில் தமிழர்களுக்குத் தோள் கொடுக்காமல் வெறுமனே பார்த்துக் கொண்டி ருந்தன.

**தமிழர்களுக்கான உதவி மறுப்பு**

லிபியப் போராளிகளுக்கு வழங்கிவரும் அதே உதவிகளை மேற்குலகம் தமிழர்களுக்கு மறுத்தி ருந்தது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகள் செயலிழந்துபோன நிலையில், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க வேண்டும் என்ற முடிவை நான்கு ஆண்டுகளுக்கும் முன்னர் இலங்கை அரசு உறுதியுடன் எடுத்திருந்தது.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்திலும் ஐக்கிய அமெரிக்காவிலும் பயங்கரவாத அமைப் பாகப் பட்டியலிடப்பட்டிருக்கும் தமிழீழ விடுத லைப் புலிகள் அமைப்பைக் காப்பதற்கு மேற்கு நாடுகள் அல்லது ஐ.நா. தலையிடும் என்ற நம்பிக்கை தமிழர்கள் மத்தியில் அதிகம் இருந்திருக்கிறது.

படையினரின் தொடர் நடவடிக்கையைத் தொடர்ந்து, நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு மூலையில் முடக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், தமது துயர் துடைக்கும் வகையில் அனைத்துலக சமூகம் தலையிடப் போகிறது என்ற எண்ணம் 2009 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் தமிழர்கள் மத்தியில் அதிகம் காணப்பட்டது.

**போராட்டங்களால் நன்மை கிடைக்கவில்லை**

புலம்பெயர் தமிழர்கள் செறிந்து வாழும் மேற்கு நாடுகளது நகரங்களில் அவர்கள் தொடரான போராட்டங்களை நடத்தினர்.

அத்துடன் தமிழர்களின் வாக்குகளில் தங்கியி ருக்கும் மேற்கு நாடுகளைச் சேர்ந்த அரசியல் வாதிகளின் ஊடாகவும் அவர்கள் தமக்கான ஆதரவைத் தேடினர்.

இதனால் எந்த நன்மையும் இந்தத் தமிழர் களுக்குக் கிட்டிவிடவில்லை.

இந்த நிலையில் ஐ.நாவில் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்துக்கு அமைய லிபியாவின் கடாபி மீது மேற்கு நாடுகள் தாக்குதலைத் தொடுத்திருக்கும் அதேநேரம், லிபியக் கிளர்ச்சியாளர்களுக்கு உதவும் ஒரு நிலைமையைத் தற்போது புலம்பெயர் தமிழர்கள் காண்கின்றனர்.

போரின் இறுதி நாள்களில் இலங்கையின் பிரச்சி னையில் மேற்குலகம் தலையிட வேண்டுமெனக் கோரி பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் தொடரான, அளவில் பெரிய மக்கள் போராட்டங்களை நடத்தி யிருந்தார்கள்.

**புலம்பெயர் மக்கள் மத்தியில் ஏமாற்றம்**

ஆனால், இன்று குறித்த இந்த இரண்டு நாடுகளும்தான் லிபியத் தலைவர் கடாபி மீதான மேற்குலகினது படை நடவடிக்கையை முன்னின்று நடத்துகிறார்கள். இது புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் மிகப்பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

புலம்பெயர் தமிழர்களுடன் நட்புடன் இருக்கும் மேற்கு ஊடகங்கள் வாயிலாக இலங்கையில் கட்டுக் கடங்காத வகையில் பொதுமக்கள் கொல்லப்படு வதாகவும் மனிதப் படுகொலை நிகழ்த்தப்படுவதாக வும் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்ட போது இலங்கை தண்டிக்கப்படலாம் என்று அனைத்துலக நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் கருதினர்.

ஆனால், நிச்சயமற்ற இந்தக் குற்றச்சாட்டுக்கள் புறம்தள்ளப்பட்டன. இருப்பினும் மேற்கு நாடுகள் ஐ.நாவிடம் ஓடிச் சென்று என்ன செய்வது எனக் கேட்கும் அளவுக்கு இலங்கையில் பொதுமக்கள் வாழ்வு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது என்று வாதிடப்பட்டது.

இலங்கையின் வடகிழக்குக் கரையோரத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த குறுகிய நிலப்பரப்பில் கடற்கரையோரமாக அமைந்தி ருந்த தற்காலிக மருத்துவமனையில் கால் கைகளை இழந்தவர்கள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதை லண்டனிருந்து கொண்டே ஊடகவியலாளர்கள் கண்டார்களாம்.

இலங்கை அரச படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களால் அல்லது வான்வழித் தாக்குதல்களின் விளைவுதானாம் இது என்று லண்டனிலுள்ள ஊடகவியலாளர்கள் கூறினர்.

நாற்பதாயிரம் பொதுமக்கள்வரை கொல்லப்பட்ட னர் என்று ஐ.நா. அதிகாரிகள் சிலர் கதை விட்டனர். ஆனால் பின்னர் இந்தத் தொகையை ஐ.நாவே மறுத்திருந்தமை வேறுகதை.

இதுபோல் பெருந் தொகையில் மக்கள் கொல்லப் பட்டார்கள் எனக் கூறுவதுதான் இலங்கை தனது படை நடவடிக்கையை இடை நிறுத்துவதற்கு அல்லது மேற்கு தலையிடும் நிலைமையை ஏற்படுத்துவதற்குத் தேவையானது என்று இவர்கள் கருதினர்.

**மேற்குலகு விடயத்தில் தவறான முடிவு**

இந்த நிலையில் இலங்கை விடயத்தில் மேற்குலகம் தலையிடும் என்று விடுதலைப் புலிகளும் புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர்களும் தவறாக முடிவெடுத்தது ஏன் என்ற கேள்வி எழுகிறது.



**விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நிறுத்தும் வகையில் அனைத்துலக சமூகம் தன்னாலான அழுத்தத்தைப் பிரயோகித்தது. ஆனால் புலிகள் அமைப்பு மற்றொரு முறை மீண்டெழுவதை விரும்பாத இலங்கை ஜனாதிபதி அந்த அழுத்தங்களுக்கு அடிபணியாததால்தான் இலங்கையில் தலையீடுகளை மேற்கொள்ள மேற்குலகம் தயங்கியுள்ளதாம்.**

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கையை அரச படையினர் தீவிரப்படுத்தியிருந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த அரசுக்கு எதிராக அனைத்துலக ரீதியில் ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இருந்த போதும் ஏன் மேற்குலகம் அமைதியுடன் இருந்தது என்பதை விளக்குவதற்கு அவதானிப்பாளர்கள் வேறு பல விளக்கங்களைத் தருகிறார்கள்.

பிரித்தானிய நாடாளுமன்றில் இருக்கும் தமிழர் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது பரப்புரையில் தங்களுக்கே நம்பிக்கை இருக்கவில்லையாம்.

பிரித்தானியாவினது வெளிவிவகாரச் செயலர் டேவிற் மில்லிபாண்டினது இலங்கை தொடர்பான கரிசனைகள் உள்நாட்டு அரசியலில் பால் அமைந்ததேயன்றி வேறெதுவும் இல்லை என்று லண்டனிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிய இரகசியச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாக விக்கிலீக்ஸ் கூறுகிறது.

### தமிழர்களின் வாக்குகளில் தங்கியுள்ள நிலைமை

பிரித்தானியாவில் அடுத்த பொதுத் தேர்தலுக்காகத் தயாராகி வரும் தொழிற்கட்சி தோல்வியிலிருந்து தப்புவதற்கு அங்கு வாழும் தமிழர்களின் வாக்குகளிலேயே அதிகம் தங்கியிருக்கிறது.

அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் மீதான மேற்குலகின் தலையீடு அவர்களது சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டதே என அவதானிகள் கூறுகிறார்கள்.

மேற்குறித்த இந்த நாடுகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் என்பதற்கு அப்பால் தமக்கான மசகு எண்ணெய் விநியோகம் தங்கு தடையற்ற வகையில் நியாய விலையில் கிடைப்பதையே இந்த மேற்கு நாடுகள் விரும்புகின்றன.

மத்திய கிழக்கில் உள்ள குறிப்பிட்ட சில நாடுகளுடன் மேற்குலகம் கொண்டிருக்கும் உறவின் தன்மை மேற்குறித்த உண்மையை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

இலங்கையிடம் எண்ணெய் வளம் இல்லை. ஈராக்கிலும் லிபியாவிலும் உள்ளதைப் போன்று எந்த வளமும் இல்லை. மேற்கு நாடுகள் ஈராக் மற்றும் லிபியாவில் தலையிடுவதற்கான காரணம் வேறு எதுவுமில்லை, அங்குள்ள குறையாத எண்ணெய் வளம்தான்.

இந்த நாடுகள் மீதான தலையீட்டை நியாயப்படுத்தும்வகையில் ஐ.நாவின் பாதுகாப்புச் சபை ஊடாக அதற்கான அங்கீகாரத்தைப் பெற முனைந்திருந்தால் ஒன்று அல்லது இரண்டு நிரந்தர உறுப்பு நாடுகள் லிபியா மீதான தாக்குதல் தீர்மானத்தை எதிர்த்திருக்கும். ஐ.நாவின் பாதுகாப்புச் சபை பிளவடைந்து இருப்பதைக் காட்டும் நிலையை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தை எதிர்கொள்வதற்கு இவர்கள் தயாராக இருக்கவில்லை.

### இந்தியாவின் உடன்பாடு இன்றிச் சாத்தியமில்லை

இந்தியாவின் உடன்பாடின்றி மேற்கு நாடுகள் எந்த வகையான செயற்பாட்டிலும் இறங்காது என்று ஆய்வாளர்கள் வாதிடுகிறார்கள்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா முதன்மையான ஒரு சக்தியாகத் திகழ்கிறது. 'இந்திரா காந்தியிசக் கோட்பாடு' என அறியப்பட்ட கொள்கையின் அடிப்படையில் இலங்கை தனது செல்வாக்குக்கு உட்பட்ட பிராந்தியம் என்றே இந்தியா கருதுகிறது.

1987 ஆம் ஆண்டு இலங்கையில் நேரடித் தலையீட்டை மேற்கொண்ட இந்தியா தனது விரலைத் தானே சுட்டுக்கொண்டது எனலாம்.

விடுதலைப் புலிகள் தோல்வியின் விளிம்பில் இருந்த தருணத்தில் இந்தியா தலையிட்டு நிலைமையை மாற்றியது. பின்னொரு நாளில் சமரிடுவதற்காக இந்தியா பிரபாகரனைக் காத்தது எனலாம்.

ஈற்றில் இந்திய இராணுவத்துக்கு எதிராகவே திரும்பிய பிரபாகரன் 1200 இந்தியப் படையினரைக் கொலை செய்ததோடு மூவாயிரத்திற்கும் அதிகமானோரைக் காயப்படுத்தியிருந்தார்.

இது இடம்பெற்ற ஒரு சில ஆண்டுகளின் பின்னர் விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இலக்கானார். விடுதலைப் புலிகளைப் பாதுகாப்பதற்கான இலங்கை மீதான இந்தியத் தலையீட்டுக்குக் கட்டளை இட்டவர் ராஜீவ்காந்திதான்.

### இந்தியா பெற்றுக்கொண்ட கசப்பான அனுபவங்கள்

இலங்கையில் இந்தியா பெற்றுக் கொண்ட இந்தக் கசப்பான அனுபவத்தின் அடிப்படையில் அது தகுந்த பாடத்தைக் கற்றிருந்தது.

நிலைமையைச் சமாளிக்கும் வகையில் இலங்கை மீதான அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் இலங்கையுடனான இருதரப்பு இராஜ தந்திரச் செயற்பாடுகளை அதிகரிக்குமாறும் இந்தியா கூறியிருந்ததாக புதுடில்லியிலிருந்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட இன்னொரு இரகசியச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக விடுதலைப் புலிகள் தொடர்ந்த பயங்கரவாத நடவடிக்கைகளின் விளைவாக அனைத்து இனங்களையும் சேர்ந்த ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் காந்தியின் அந்த மூன்று குரங்குகளைப் போல் - நல்லதைப் பார், நல்லதைக் கேள், நல்லதைப் பேசு என்ற வகையில் அனைத்துலக சமூகம் செயற்பட்டது.

போரை நிறுத்தும் வகையில் தன்னாலான அழுத்தத்தைப் பிரயோகித்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் ஒரு முறை மீண்டெழுவதை ஜனாதிபதி ராஜபக்ஷ விரும்பவில்லை.

ஜனாதிபதி ராஜபக்ஷ மேற்கின் அழுத்தத்துக்கு அடிபணியாமல் செயலாற்றியமைதான் மேற்கு இலங்கையில் தலையீடுகளை மேற்கொள்ளத் தயங்கியதற்கான காரணம்.

*(நன்றி: புதினப்பலகை)*

## நீ எந்தக் கண்ணாடி



சன நெருக்கடி மிக்க வீதியோரத்தில் ஒரு பிச்சைக்காரி இடுப்பில் குழந்தையுடன் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தாள். அருவருப்பான அவளுடைய தோற்றத்தைக்கண்டு யாரும் பிச்சைபோட முன்வராமல் ஒதுங்கி விட்டனர். அவள் இடுப்பில் இருந்த சின்னக் குழந்தை பசிதாங்காமல் அழுகிறது. தூக்கிக் கொண்டு போய் ஒரு தேநீர் கடைக்கு முன் நின்று குழந்தையைக் காட்டி தேநீர் கேட்கிறாள். தேநீர்க் கடைக்காரர் கெட்ட வார்த்தைகளால் அவளைத் திட்டினாரே தவிர அழும் குழந்தையைக் கண்டு இரங்க வில்லை. இந்தத் துன்பகரமான காட்சி அந்த வழியால் செல்வோர் மனதையும் பாதிக்கவே இல்லை.

அதே நேரத்தில் அங்கு பிச்சை கேட்டுவந்த இன்னொரு சின்னப் பெண் அழுதுகொண்டிருந்த பச்சைக் குழந்தையைப் பார்த்து ''பசிக்கு தாடா... அழாதே அழாதே... என்று தேற்றியபடி தன்னுடைய அலுமினியத் தட்டில் இருந்த சில்லறைகளைக் கொட்டி எண்ணி தேநீர்க் கடைக்காரர் முன் வைத்துவிட்டுக் காசு கொடுத்துவிட்டேன்... தேநீர் கொடு? என்று கேட்டு வாங்கிக் கொடுத்து விட்டு சென்று விடுகிறாள்.

தானே பிச்சை எடுக்கும் நிலையிலும் பச்சைப்பிள்ளை பசிகண்டு இரங்கித் தன் உணவைத் தியாகம் செய்த அந்தக் கருணைப்பெண் மாதிரி சிலரால்தான் முடியும். மனம் கொஞ்சம் ஆச்சரியமானது!

ஆதிசங்கரர் வாழ்விலும் இப்படி ஒரு நிகழ்ச்சி உண்டு. படிக்கும் காலத்தில் மரபு கருதி ஒரு வீட்டு வாசலில் ''போய் பவதிபிட்சாம் தேஹி'' என்று பிச்சை கேட்டிருக்கிறார் சங்கர். அந்த வீடு மிகவும் ஏழையான ஓர் அந்தணர் வீடு. பிச்சையிட எதுவும் இல்லாமல் தவித்த அந்த வீட்டுத்தாய் கடைசியாகக் கைவசம் உள்ள நெல்லிக்கனியை எடுத்து வந்து சங்கரின் பிச்சைப் பாத்திரத்தில் போட்டாள். அவளது ஏழ்மையிலும் பிறருக்குத் தரும் தாய்மை மனம் கண்டு உருகிய சங்கர் பாடியதே கனக தாரஸ்தவம். ஏழ்மையிலும் உதவும் குணம் உள்ளவர்கள் உண்மையில் மிகப் பெரியவர்கள். கனக தாரஸ்தவம் படித்தால் காசு கொட்டும் எனப் பலர் படிக்கிறார்கள். ஏழ்மையிலும் பிறருக்கு உதவும் எண்ணமிருந்தால் இறைவன் அருள்வார்.

ஆனால் ஏழ்மையில் பிறர்துயர் அறிந்து உதவுகிறவர்கள் வசதிவந்தால் அப்படி இருப்பார்களா என்பது ஒரு முக்கியமான கேள்வி. இதுபற்றி ஓர் அழகான கதை.

கடுமையான ஏழ்மையிலும் தன் வீடுதேடி வந்து பிச்சை கேட்ட ஒரு சாதுவை வணங்கினான் ஓர் ஏழை. தன் பொருட்டுத் தன் மனைவி காய்ச்சி வைத்திருந்த கஞ்சியைத் துறவிக்குப் பணிவுடன், மகிழ்வுடன் கொடுத்து வணங்கி எழுந்தான். அவனுடைய ஏழ்மையைக் கண்ட துறவி ஏதாவது உதவவேண்டும் என்று எண்ணினார். ஏழையாக இருக்கும்போதே இவ்வளவு இரக்கத்துடன் இருக்கிறானே. செல்வன் ஆனால் பலருக்கும் உதவுவானே என்று நினைத்தார். தான் வணங்கிவந்த கையடக்கமான சுவாமி சிலையை அவனுக்கு வழங்கி ''நான் காசிக்கு போகிறேன். திரும்பி வரும்வரை இந்த சுவாமியைப் பாதுகாப்பாக வைத்து பூசை செய். வந்து வாங்கிக்கொள்கிறேன். உனக்கு நிறையச் செல்வம் வரட்டும்'' என்று வாழ்த்திவிட்டுப் போனார்.

அந்த மகானுடைய வாக்குப் பலித்தது. அந்த ஏழை கொஞ்சம் கொஞ்சமாகச் செல்வன் ஆனான். அவனது எல்லா முயற்சியிலும் எதிர்பார்த்ததை விட அதிக இலாபம் வந்து கொட்டியது. ஆரம்பத்தில் நிறையத் தான தருமங்கள் செய்தான். எதிர்பாராமல் வந்த பணம், சுவாமி கொடுத்தது என்று உணர்ந்து வேலையாள்களை அன்புடன் நடத்தினான். எல்லோருக்கும் தன் வரவைத் தாராளமாகப் பகிர்ந்து கொடுத்தான்.

அவன் செல்வனாகியும் பண்பாடு மாறாது பிறருக்கு உதவுகின்றான் என்பதை உணர்ந்துகொண்ட துறவி மகிழ்ச்சி அடைந்து காசி புறப்பட்டுப்போனார். ஆனால் அவர் போன சில மாதங்களில் புதுப் பணக்காரன் போக்கே மாறிவிட்டது. பிறர் துயரங்களைக் கண்டு உதவும் பழக்கம் மாறிக் கோபம் வந்தது. எப்போது பார்த்தாலும் தனது பணத்தை எல்லோரும் அள்ளிக் கொண்டுபோவது போல உணர்ந்தான். பணத்தின் மீது ஆசை வந்துவிட்டது. இறுக்கிப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கஞ்சனாக மாறினான். பிறர் துயரத்தைக் கண்டும் காணாதவனாகிவிட்டான்.

துறவிக்கு இந்தக் தகவல் மெல்ல மெல்லக் காசிக்கே வந்து சேர்ந்தது. ஒரு நாள் இந்த ஊருக்குத் திரும்பி வந்தார். துறவி திரும்பி வந்த செய்தி தெரிந்ததும் புதுப்பணக்காரனுக்குக் கவலையாகிவிட்டது. துறவி சாமி சிலையைக் கேட்டால் கொடுக்கவேண்டிவரும். இவ்வளவு நாள் சேர்த்த பணம் இனிச் சேமிக்க முடியாமல் போய்விடும். எனவே துறவியிடம் நல்லபேர் எடுக்கவேண்டும். அவர் சாமிசிலையைக் கேட்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான்.

தான் ஏழையாய் இருந்தபோது உடுத்திய பழைய துணிமணிகளை அணிந்துகொண்டு துறவி இருக்கும் இடம் தேடிப் போய் வணங்கினான். தான் முன்புபோலவே இருப்பதாகவும் மாறவே இல்லை என்றும் நடித்தான். கண்ணாடி மாதிரித் தூய்மையானவன் என்று கதைவேறு விட்டான்.

''எந்தக் கண்ணாடி?'' என்றார் துறவி. பதில் கூற முடியாமல் விழித்தான் பணக்காரன். துறவி சொன்னார் ''அப்பா... இப்போது உன்மனம் கண் ணாடிதான். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் உள்ளே இருப்பதை வெளி யேயும் வெளியே இருப்பதை உள்ளேயும். காட்டும் கண்ணாடியாக அப்போது இருந்தாய். அதனால் ஏழைகள் துயரம் உனக்கு அப்படியே புரிந்து. இப்போதும் நீ கண்ணாடிதான். ஆனால் முகம் பார்க்கும் கண்ணாடியாக இருக்கிறாய்'' என்று சொல்லி விட்டுச் சிரித்தார்.

பூசப்படாத கண்ணாடி வெளியே இருப்பதைக் காட்டுவது போல பிறர் படும் கஷ்டத்தை இவன் மனம் உணர்ந்தது. அப்போது பூசப்பட்ட கண்ணாடியோ வெளியே இருப்பதை உள்ளே காட்டாது. மாறாகப் பார்ப்பவன் முகத் தையே திரும்பத் திரும்பக் காட்டும். இப்போது மனம் அவன் பிரச்சினை களையே எப்போதும் காட்டிக் காட்டி பிறர் துயரத்தை இவன் உணர முடியாதபடி மறைந்துவிட்டது.

''கொஞ்சம் வெள்ளி ஒட்டிக்கொண்டிருக்கும் கண்ணாடியே பிறரை மறைக்கிறது. அதுபோல் உன்மனம் முழுவதும் வெள்ளி ஒட்டிவிட்டது. அதாவது காசாசை அப்பிக்கிடக்கிறது. அதைத் துடைத்து எறி... பிறரைப் பார்க்கும் கண்ணாடியாக மாறு. என்று சொல்லிவிட்டுத் துறவி புறப்பட்டார்.

நம் மனம் எந்தக் கண்ணாடி? வெள்ளி ஒட்டிய கண்ணாடியா? வெள்ளி ஒட்டாத கண்ணாடியா?

**சுகி.சிவம்**

உதயன்
07 மார்ச் 2011 வியாழக்கிழமை

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி





| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07.05.1950 | 25.03.2004 |

## திருமதி வைகுந்தராஜா தையல்நாயகி
### (தேம்பாள், மண்டைதீவு)

திதி:சதுர்த்தி

ஏழு வருடங்களாய் நாம்
ஏழையானோம் தாய் அன்பினிலே!
எப்படியம்மா முடிந்தது,
எம்மை விட்டுச் செல்ல?
தாயிடம் பட்ட கடன்- நாம்
தரணியிலே தீர்ப்பதுதான் எப்போது?
அன்று,
தையல் நாயகியாய் ,
தலைவனுக்கு சேவகியாய்,
தங்கமான சகோதரியாய்,
தனித்துவ தாயானீர்...!

இன்று,
பிஞ்சுக் குழந்தைகளுக்குப்
பலகதைகள் கூறிட-உமை
பாட்டியாகத் தேடுகின்றோம்
பாரினில் நீர் இல்லை...!
ஆனாலும்,
அம்மா உமை- அந்த
அம்மனாகவே காண்கின்றோம்
ஆண்டவன் சந்நிதியிலே...!

"தேம்பாளகம்",
ஆடியம்பிட்டி ஒழுங்கை,
சாவகச்சேரி.

நினைவுகளுடன்....
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49,19,20)

# ஒரு கி.மீ. திருத்தத்துக்கு 5 கோடி செலவு!

# தார் வீதிக்கு தங்கமா பூசுகிறது அரசு!!

தார் வீதிகளுக்குத் தங்கம் பூசுகின்றார்கள்; பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சல்லடை போன்ற ஆடைகளை வழங்குகின்றார்கள்; இன்றைய அமைச்சர்கள் என்று கிண்டலடிக்கின்றனர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள். அதேவேளை, லிபியாவில் சண்டை ஏற்பட்டதால் இங்கே எண்ணெய்விலை கூடி விட்டது என்கிறார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

இதுமட்டுமல்ல குழந்தைகளின் பால் மா உட்பட எல்லா உணவுப் பொருள்களின் விலைகளுமே அதிகரித்துவிட்டன என்று சுட்டிக்காட்டுகிறார் ரவி கருணாநாயக்க.

இப்படி ஏட்டிக்குப் போட்டியாக பல சுவையானதும் சிந்திக்கக் கூடியதுமான கருத்துகள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் மாலை பிரதிச் சபாநாகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

**கிரிக்கெட் வீரர்களுக்கு வாழ்த்துக்கள்**

நாடாளுமன்றத்தின் கடந்த தொடரில் பேசிய எல்லோருமே இலங்கைக் கிரிக்கெட் அணி வெற்றி பெறும், உலகக் கிண்ணத்துடன் வென்று வருவர் என்று உறுதியுடன் பேசினர். வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். ஆனால் அதில் சிறு ஏமாற்றம் என்றாலும் உலக அளவில் இரண்டாவது அணியாக வந்ததும் ஒரு பெரிய சாதனையே என்று ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் ஏக காலத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். ஆளும் கட்சியின் சார்பில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் எதிர்க்கட்சியினர் சார்பில் ஜோன் அமரதுங்கவும் இலங்கை கிரிக்கெட் அணியினருக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பேசினர்.

**சூட்டைக் கிளப்பியது கேள்வி வேளை**

இதனைத் தொடர்ந்து வாய்மூல விடைக்கான கேள்வி நேரம். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர, பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் சியம்பலாண்டுவ பிரதேசத்தில் திருத்தப்பட்ட பாதை ஒன்று தொடர்பாக கேள்வி எழுப்பினார்.

பொத்துவில் - அக்கரைப்பற்று வீதி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. மீளமைக்கப்பட்ட தூரம் எவ்வளவு? செலவான பணம் எவ்வளவு? என்று கேட்டார். இக்கேள்விக்கு பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன இப் பாதை பயங்கரவாத நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. 170 மதகுகளும் 38 சிறு பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் தூரம் குறைவு என்றாலும் கூடுதலான பணம் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா.

**தார் வீதிக்கு தங்கமா பூசினீர்கள்**

சபாநாயகர் அவர்களே இந்த அமைச்சர் இங்கே தவறான விவரங்களைக் கூறுகின்றார். அப்பாதையில் புதிதாக எந்தவொரு மதகோ, பாலமோ அமைக்கப்படவில்லை. இருந்த மதகுகளை சிறிது அகலமாக்கி விட்டுள்ளனர். ஒரு கிலோ மீற்றர் தூரப் பாதைக்கு 5 கோடி ரூபா செலவிட்டுள்ளனர். அப்படியானால் இந்தப் பாதைக்கு தங்கமா பூசியிருக்கின்றார்கள் என்று கேட்டார். இதனால் சபையில் மட்டுமல்ல பார்வையாளர் கலரியில் இருந்த பாடசாலை மாணவர்களும் வாய்விட்டு சிரித்து விட்டனர்.

**சல்லடைத் துணியில் பாடசாலைச் சீருடை**

பார்வையாளர் கலரியில் பாடசாலை மாணவ, மாணவிகள் நிறைந்து இருந்த வேளையை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டார் புத்திக பத்திரான.

மாத்தறை மாவட்டத்தில் முலட்டியான கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைத் துணிகள் மிகவும் தரம் குறைந்தவை. மாணவிகள் இந்த சல்லடைத் துணியில் சீருடை அணிந்து சென்றால் நாம் கண்களை மூடிக்கொள்ள வேண்டும் என்று கூறியதுடன் வழங் கப்பட்ட சீருடையையும் சபையில் தூக்கிக் காட்டினார் புத்திக்க பத்திரன.

சிறிதும் எதிர்பாராத வேளையில் புத்திக பத்திரன சல்லடை போன்ற சீருடைத் துணியைச் சபையில் காட்டியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

இதனைச் சமாளித்தார் பிரதிக் கல்வி அமைச்சர் விஜித முனி சொய்சா. அரசு பல கோடி ரூபாய்களை செலவு செய்து பாடசாலை மாணவர்களுக்கு தரமான சீருடைகளை வழங்கி வருகின்றது. இதுவரை அப்படியான முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. இங்கு ஏதோ தவறு ஏற்பட்டுள்ளது. இதனைப் பரிசீலனை செய்வோம் என்று சமாளித்தார் பிரதிக்கல்வி அமைச்சர்.

ஐயா, நான் இதைக் கடையில் வாங்கிக்கொண்டு வரவில்லை. மாணவி ஒருவருக்கு வழங்கப்பட்டதையே கொண்டுவந் தேன் என்று திருப்பி அடித்தார் புத்திக பத்திரன.

சும்மா இருப்பாரா நமது அஸ்வர். ஒழுங்குப் பிரச்சினை என்று துள்ளி எழுந்தார். பிரதி சபாநாயகர் அவர்களே! நிலையியற் கட்டளையின்படி இந்த சபைக்குள் எந்த ஒரு பொருளையும் கொண்டு வர அனுமதிக்கப்பட முடியாது. அப்படியிருக்க கௌரவ உறுப்பினர் எப்படி இத்தக் துணியைச் சபைக்குள் கொண்டுவர முடியும் என்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்தார். என்ன செய்வது, பிரதி சபாநாயகரோ அடுத்த கேள்விக்குப் பதில் அளிக்கும் படி கூறிவிட்டார்.

**அம்பாந்தோட்டை மத்தல புதிய விமான நிலையப் பணியில் ஆயிரம் சீனர்களா?**

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டு வரும் மத்தல விமானத் தளம் தொடர்பாகக் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா சில உண்மைகளை வெளியே கொண்டு வந்தார்.

இந்த விமான நிலைய வேலைகள் தொடர்பாக நிதி உதவி வழங்குவது யார்? அது நன்கொடையா அல்லது கடனா? என்று கேட்டதோடு இங்கு வேலை செய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து ஆள்களை அழைத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்றும் கேட்டார்.




இக்கேள்விக்கு பிரதி அமைச்சர் பிரியங்க ஜயரத்ன பதிலளிக்கையில், இத்திட்டத்துக்கு சீன அரசு உதவி வழங்குகின்றது. 209 மில்லியன் அமெரிக்க டொலர் மூலதன செலவினமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொகையை 20 வருட தவணைக் கடன் அடிப்படையிலேயே வழங்கி உள்ளது. இவ் வேலைத்திட்டத்துக்கு பணியாளர்களை வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரவும் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றார் பிரதி அமைச்சர்.

இப்பொழுதே ஆயிரத்துக்கும் அதிகமான சீனர்கள் இங்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக அறிகின்றோம். எத்தனை பேர்தான் அழைத்து வரப்படுவார்கள் என்று கேட்டார் ஜோசப் மைக்கல் பேரேரா. இந்த வேலைத் திட்டம் முடியும்வரை அழைத்து வருவார்கள் என்று கூறினார் பிரதி அமைச்சர்.

சரி இதற்குத்தான் நேரடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. ஒரு விமான நிலையம் அமைக்கப்படும் போது "ஐடா" அமைப்பின் அங்கீகாரம் பெறவேண்டும். இந்த அங்கீகாரம் பெற்று விட்டீர்களா? என்று மடக்கினார் ஜோசப் மைக்கல் பெரேரா.

இக்கேள்வியினால் விழிபிதுங்கிப் போனார் பிரதி அமைச்சர். அங்கீகாரம் பெறப்பட்டது என்றோ இல்லை என்றோ கூறாமல் பெறப்படும் என்று பட்டும் படாமல் கூறிவிட்டு அமர்ந்து கொண்டார் பிரதி அமைச்சர்.

**இரண்டாவது சுற்றிலும் பதில் அளிக்கவேண்டும்.**

நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ரவி கருணாநாயக்க இரண்டு கேள்விகளுக்கு முன் அறிவித்தல் கொடுத்து இருந்தார். ஆனால் முதல் சுற்றில் கேள்விகள் அறிவிக்கப்பட்ட போது அவர் சபையில் இருக்க வில்லை. இரண்டாம் சுற்று கேட்கப்பட்டபோது ரவிகருணா நயக்க சபைக்குள் இருந்தார்.

என்றாலும் ரவி கருணாநாயக்கவின் கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் அளிக்காமல் சபாபீடத்தில் சமர்ப்பிப்பதாகக் கூறினார் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன.

இதனால் சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. கேள்வி கேட்கும் ஒரு உறுப்பினர் சபையில் எழுந்து நின்றால் அதற்கு அமைச்சர் பதில் சொல்லியாக வேண்டும். நிலையியல் கட்டளையின் 27 ஆம் பிரிவில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது என்றார்.

கேள்வி நேரத்தின் போது முதல் சுற்றில் உறுப்பினர்கள் இல்லாத போதும் இரண்டாவது சுற்றின்போது அந்த உறுப்பினர் சபையின் இருந்தால் அக் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும் எனக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணங்கம் காணப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டிக் கேள்விக்குப் பதில் அளிக்கும்படி கூறினார் பிரதி சாபநாயகர் சந்திம வீரக்கொடி. ஆனாலும் பிரதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன நேரடியாகப் பதில் கூறமுடியாது என விடாப் பிடியாக சாதித்து விட்டார்.

**தமிழ், சிங்கள மொழி பெயர்ப்புகள் இல்லாத சட்டத்திருத்தம்**

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பான சட்டத்திருத்தங்களில் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகள் வழங்கப்படவில்லை. இதனால் சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

சிறிது நேரத்தின் பின் சிங்கள மொழிபெயர்ப்பு மட்டும் வழங்கப்பட்டது. இதனை வன்மையாகக் கண்டித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன்.

முதலில் ஆங்கிலத்தில் மட்டும் கொடுத்தீர்கள். பின்னர் சிங்களத்தில் கொடுத்தீர்கள். ஆனால் தமிழில் கொடுக்கப்படவில்லை. இதனை வன்மையாகக் கண்டிப்பதாக கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தார் சுமந்திரன்.

பின்னர் இந்த விடயம் தொடர்பாக உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், உள்ளூராட்சி சபை விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது முன்வைக்கப்பட்ட திருத்தங்களை ஏற்றுக் கொள்வதாக இணக்கம் காணப்பட்ட போதும் அவை தலைகீழாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதே வேளை எங்களுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் வகையில் தமிழ்மொழியாக்கமும் வழங்கப்படவில்லை. எனவே எங்களால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு தமிழில் அச்சிடப்பட்டு வழங்கும்வரை இந்த விவாதத்தைப் பின்போடுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று கூறிவிட்டுசபையில் இருந்துவெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஏனைய கூட்டமைப்பினரும் வெளியேறி விட்டனர்.

நிலைமை இப்படி இருக்கும் போது அரச தரப்பினர், ஒரு வழிப் பாதையாக விவாதத்தை நடத்திக் கொண்டு சென்றனர்.

பின்னர் எதிர்க்கட்சிக் கொறடாவான ஜோன் அமரதுங்க அவர்கள் அரசு எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டது.

நாம் இந்த சட்ட வரைவுகளை ஏகமனதாக நிறைவேற்றவே முன்வந்தோம். இதனால் வாக்கெடுப்பு நடத்துவதை மேலும் ஒரு நாளைக்குப் பிற்போட வேண்டும் என்ற எமது கோரிக்கையும் ஏற்கப்படவில்லை. இதனால் விவாதத்திலும் வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளாமல் வெளிநடப்புச் செய்வதாகக் கூறிச் சபையில் இருந்து வெளியேறினார். அவருடன் ஜே.வி.பியினரும் சபையை விட்டு வெளியேறினர். சபையில் எதிர்க்கட்சிகள் இல்லாத நிலையில் உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பான மூன்று சட்ட வரைவுகளும் திருத்தங்களுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

*உதயன் சபைச் செய்தியாளர்*

**புத்திரசிகாமணி**

# மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட குழப்பமே எரிபொருள் விலைகளின் உயர்வுக்கு காரணம்

## அமைச்சர் பிரேமஜயந்த விளக்கம்

எண்ணெய் உற்பத்தி செய்யும் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட குழப்ப நிலையே எரிபெருள் விலைகளில் இங்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் விரேமஜயந்த.

எண்ணெய் விலை தொடர்பாக நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச சந்தையில் கடந்த இரண்டு மாதங்களில் எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. அதற்கமைவாக ஏப்ரல் 2 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பெற்றோல் லீற்றரின் விலை 10 ரூபாவிலும், டீசல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவிலும், மண்ணெண்ணெய் லீற்றர் என்றின் விலை 10 ரூபாவிலும் அதிகரிக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 29ஆம் திகதி பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 115 ரூபா வாக காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி சுப்பர் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 148 ரூபாவாகக் காணப்பட்டது. அதன் பின்னர் கடந்த 2ஆம் திகதி பெற்றோல் லீற்றர் விலை 10 ரூபாவில் அதிகரிக்கப்பட்டது. சூப்பர் பெற்றோல் லீற்றர் ஒன் றின் விலை 2009 ஆம் ஆண்டு 133 ரூபாவாகக் குறைக்கப்பட்ட தோடு கடந்த 2ஆம் திகதி மீண்டும் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் டீசலின் விலை உலக சந்தையில் ஒரு பீப்பாயின் விலை 81 அமெரிக்க டொலராகக் காணப்பட்டதோடு தற்போது 136 அமெரிக்க டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 2ஆம் திகதி டீசல் லீற்றரின் விலை 73 ரூபாவிலிருந்து 76 ரூபாவிற்கு அதிகரிக்கப்பட்டது. கேஸ் எரிவாயுவுக்கு எவ்வித வரியும் அறவிடப்படவில்லை. எரிபொருள் இறக்கு மதிக்கான சுங்கவரியே அறவிடப் படுகின்றது -என்றார்.


(204-5)

# நவக்கிரி அருள்மிகு மாணிக்கப் பிள்ளையார் ஆலயம்

# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர்

## 07.04.2011





### வற்றாத நீரூற்றின் அருகிருந்து அருள் சுரக்கும் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார்

வலி.கிழக்கு புத்தூர் மத்தியில் நவக்கிரி என்னும் பகுதியில் இருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் நீண்ட வரலாற்றுப் பெருமையுடையது.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த கடைசி அரசனாக விளங்கிய சங்கிலி அரசன் காலத்தில் சோழமண்டலத்திலிருந்து வந்து யாழ்.குடாநாட்டில் குடியேறிய மூதாதையர்களால் வழிபாடு செய்யப்பட்ட ஆலயம் இதுவாகும்.

புராதன மன்னர் காலத்தில் நில அறை இங்கிருந்து கீரிமலைவரை பயன்படுத்தப் பட்டது. இக்காரணத்தினால் நில அறை நிலாவரை என வழங்கப்பட்டது என சான்றுகள் பகர்கின்றன. மேலும் இதே இடத்தில் இராமபிரான் தனது பரிவாரங்களுடன் இலங்கை வந்து தங்கித் திரும்பிச் செல்லும் வழியில் தண்ணீர்த் தாகம் ஏற்பட்டபோது தண்ணீர் இல்லாது பரிவாரங்கள் அவதிப்படவே இராமபிரான் தனது வில்லினால் ஊன்றியபோது தண்ணீர் பீறிட்டு வந்து தாகம் தீர்த்தது. இந்நீரூற்று வற்றாத நீர்ப்பெருக்காக இன்றும் உள்ளது. இதன் ஆழம் அறிய முடியாத ஒன்றாக உள்ளது.

நவக்கிரி கிராமத்தில் அமைந்திருக்கும் இக்கேணியின் சுற்றுப் புறத்தின் மத்தியில் நவசைலேஸ்வர சிவன் ஆலயமும் உள்ளது.

இக்காலகட்டத்தில் எம்மூதாதை யர்களால் சிறிய கொட்டில் அமைத்து கல்லில் மாணிக்கக் கல் ஒளிவீச அக்கல்லை வைத்துப் பாலூற்றித் தினமும் வணங்கி வந்தார்கள் என்றும் தொடர்ந்து அவ்வூர் மக்கள் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரை வைத்து வழிபாடு செய்து வந்தார்கள் எனவும் கூறுவர்.

ஊர்மக்களின் ஊக்கத்தினாலும் விடாமுயற்சியினாலும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாருக்குக் கோயில் அமைத்து புனருத்தாரணம் செய்து 1968 ஆம் ஆண்டு பங்குனி மாத ரோகினி நட்சத்திர தினத்தன்று கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

1967 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை ஊர் மக்களால் அலங்கார உற்சவம் பத்து நாள்களும் நடத்தப்பட்டுப் பதினோராம் நாள் பங்குனிமாத ரோகினி நட்சத்திரத் திரத்தில் தீர்த்தோற்சவமும் நடத்தப்பட்டது.

பின்னர் 1995 ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டுக் கொடியேற்றிக் கட்டுத்தேர் அமைத்து பங்குனி மாத ரோகினி நட்சத்திரத்துக்கு முதல் நாள் கட்டுத்தேரில் ஆரோகித்து மக்களுக்கு அருள்பாலிக்க வீதியுலாச் செய்தார்கள்.

2003 ஆம் ஆண்டு ஊர் மக்களாலும் வெளிநாட்டு அன்பர்களினாலும் சித்திரத்தேர் அமைப்பதற்குத் தேர்த்திருப் பணிச்சபை அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. திருநெல் வேலியைச் சேர்ந்த சிற்பவல்லுநர் சீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் குழுவினரால் சித்திரத்தேர் அமைக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் வெள்ளோட்டம் நடத்தப்பட்டு தேர்த் திருவிழா அன்று இழுக்கப்பட்டது. ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் புதிய சித்திரத் தேரில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

இன்றைய தேர் உற்சவம் ஏழாம் ஆண்டு நிறைவைக் காட்டுகிறது. எல்லாம் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரின் திருவருளே.

பரிபாலன சபையினர், நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்.

### வேழமுகத்தானைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்



தனக்குமேல் நாயகன் இல்லாத தனிப் பெரும் தலைவனாம் விநாயகப் பெருமானின் திருவருளை மிகுந்து எல்லோரும் நலமே வாழ பிரார்த்தனை பண்ணி அருள்வளர் நவக்கிரிப் பதியில் பல்லாண்டு காலமாக அருள்பாலித்துவரும் கணபதிக்கு பெருந்திருவிழா எடுத்து பத்தாம் நாளாகிய இன்று அதிகாலைப் பொழுதில் விநாயகப் பெருமான் அழகிய சித்திரத்தேரில் ஆரோகணித்து பக்தர்களை எல்லாம் காத்து ரட்சித்து அவர்களுக்கு நேரும் இடர்களை களைந்து அவர்களை தமது திருவடி நிழலில் ஆட்கொண்டு பவனிவரும் வேளையில் நாமும் விநாயகப் பெருமானின் திருவடித் தாமரைதனை பற்றி தொழ எல்லோரும் நலமேவாழ ஆசிகூறுவதில் பேருவகை கொள்கின்றேன். சரியை முதலாம் நாற் பாதங்களில் நின்று தொண்டு செய்யும் பரிபாலகர்கள், திருவிழா உபயகாரர்கள் நவக்கிரி வாழ் மக்கள் எல்லோரும் இந்த விழா சிறக்க உதவிய நல்லடியார்கள் எல்லோரும் மாணிக்க விநாயகர் பாதந்தொழுது அவன் திருத்தேர் வடம் பிடித்து எடுத்த பிறவிப் பயன்பெற வேளமுகத்தானைத் தொழ ஜீவான்மாக்களுடைய வாழ்வு சிறக்கும் என ஆசிகள் பல கூறுகின்றேன்.

சிவஸ்ரீபிரம முத்துக்குமாரசாமிக் குருக்கள், மஹோற்சவ குரு,
*நவக்கிரி மாணிக்க விநாயகர் ஆலயம்.*

### தலைவர் ஆசியுரை



பிரணவத்தின் வடிவாகவும், பொருளாகவும் விளங்கும் நவக்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் இன்று சித்திரத் தேரில் ஆறாவது ஆண்டாகப் பவனி வந்து மெய்யடி யார்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

நவக்கிரிப் பதியினிலே வற்றாத நீரூற் றின் அருகில் இருக்கும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் அருட்பெருக்கை உடையவர். வேண்டும் வரம் யாவும் அருளுவார். அவரது விசித்திரமான சித்திரவடிவத் தேரில் பிள்ளையார் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாகும். தேரோட்டத்தில் வடம்பிடிப்போர் மாணிக் கப்பிள்ளையா ரின் ஆனந்தபுவனம் எனப்படும் கைலாய பூமியில் ஏற்கனவே இடம்பிடித்தோர் ஆவர்.

எனவே ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் அடியார்கள் தம் வாழ்வில் சீரும் சிறப்பும் பேறும் பெருவாழ்வும் பெறுவதோடு நாட்டில் அமைதியும் சமாதானமும் பெறுவார்கள் என வாழ்த்தி நிறைவு பெறுகின்றேன்.

எஸ்.சுப்பிரமணியம்
*தலைவர், ஆலய பரிபாலன சபை,*
*நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில்.*

## இரத பவனி சிறப்புற வாழ்த்துவோர்

**சிவன் வெதுப்பகம், சிவன் சிற்றுண்டிச்சாலை**
*சுவையான உணவு வகைகள், சிற்றுண்டிகள் குறித்த நேரகாலத்துக்கு ஒடருக்குச் செய்து தரப்படும்.*
சுன்னாகம் வீதி,நவக்கிரி,நிலாவரை.

**குட்டி பல்பொருள் வாணிபம்**
*சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*
நவக்கிரி,புத்தூர்.

**துர்க்கா அரைக்கும் ஆலை**
*நெல்குற்றுதல், மா அரைத்தல், மிளகாய்த்தூள் அரைத்தல் துப்புரவாகச் செய்து கொடுக்கப்படும்.*
சுன்னாகம் வீதி, நவக்கிரி,புத்தூர்.

**ரவி விவசாயக் களஞ்சியம்**
*உரவகைகள், கிருமிநாசினி வகைகள், விதைகள் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.*
நவக்கிரி மேற்கு,புத்தூர்.

**கந்தையா கல் உடைக்கும் ஆலை**
நவக்கிரி, புத்தூர். குட்டிபப்புலம், வசாவிளான்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
*சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*
நவக்கிரி,புத்தூர்.

**டிலெக்சன் உணவகம்**
*சுவையான சிற்றுண்டிகள் ஒடருக்குச் செய்து தரப்படும்.*
நிலாவரை,புத்தூர்.

**மாஸ்ரர் ஸ்ரோர்ஸ் விவசாயக்களஞ்சியம்**
*உரவகைகள், கிருமிநாசினிகள், விதைகள் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.*
இராச வீதி,கோப்பாய்.

**சூர்யா மருந்தகம்**
*மருந்து வகைகளை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*
பஸ்நிலையம் முன்பாக, அச்சுவேலி.

**குமணன் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
*சகலவிதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*
நவக்கிரி,புத்தூர்.

**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
*சகலவிதமான புடைவை வகைகள் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.*
இல: 54, பெரியகடை,யாழ்ப்பாணம்.

**தேனுஜன் ரேட்ஸ்**
*எம்மிடம் கட்டடப் பொருள்கள், துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்கள், விவசாய உள்ளீடுகள், பெயின்ற் வகைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக்கொள்ளலாம்*
சுன்னாகம் வீதி, நவக்கிரி சந்தி, புத்தூர். தொ.பே: 021 3007021

**கஜமுகன் ஐஸ்கிறீம் ஹவுஸ்**
*பல்சுவை பழவகைகள், கிறீம் வகைகள் ஒடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.*
நவக்கிரி, புத்தூர்.

**ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் இந்து இளைஞர் மன்றம்**
நவக்கிரி,புத்தூர்.

**அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம் (வ/து)**
நுகர்வு சேவையுடன் கூட்டுறவு நகர் சேவை, கிராமவங்கி சேவை, தொலைத் தொடர்பு சேவை யாவும் மக்கள் சேவையாகச் செய்யப்பட்டு வருகின்றன.
பருத்தித்துறை வீதி அச்சுவேலி.தொ.பே 021 222 2382

**எல்லாளன் விளையாட்டுக் கழகம்**
நவக்கிரி, புத்தூர்.

**சுதாயினி ரேடர்ஸ் பல்பொருள் வாணிபம்**
*சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*
நவக்கிரி,புத்தூர்.

**மிதூஸ் கிறீம் ஹவுஸ்**
*பல்சுவை பழவகைகள், கிறீம் வகைகள் ஒடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.*
நவக்கிரி, புத்தூர்.

**ராஜன் சேவிஸ் ஸ்ரேசன்**
*மோட்டார் சைக்கிள் திருத்துநரும் சேவிஸ் செய்து கொடுப்பவரும்*
நவக்கிரி,புத்தூர்.

**மகிம்சன் களஞ்சியம்**
சைக்கிள் உ திரிப்பாகங்கள் விற்பனையாளர்.பல்பொருள் வாணிபம்.
சுன்னாகம் வீதி, புத்தூர், நிலாவரை.
தொ.பே: 0771226728

**சாந்தா பல்பொருள் வாணிபம்**
*சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*
சுன்னாகம் வீதி, புத்தூர்.

**தமிழினி பல்பொருள் வாணிபம்**
*சுவையான சிற்றுண்டிகள், ஒடருக்குச் செய்து தரப்படும்.*
நிலாவரைச்சந்தி, நவக்கிரி.

**ராம் C.D வேல்ட் - எலக்ரோனிக்**
*ஓடியோ, வீடியோ சிடி, அன்ரனா வகைகள் மற்றும் ரி.வி, ரேடியோ உதிரிப்பாக விற்பனையும், இலத்திரனியல் பொருள்கள் திருத்தலும்.*
220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# பேலியகொடை மீன்சந்தையில் பாதாளக் கோஷ்டியினர் ஆதிக்கம்

## தீவிரப்படுத்தப்பட்டன கண்காணிப்புகள்

கொழும்பு, ஏப் 7

பேலியகொடையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட நவீன மீன் சந்தையில் பாதாளக் கோஷ்டிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சொகுசு வாகனங்களில் வரும் இவர்கள் இங்கு வியாபாரம் செய்வதாயின் தங்களுக்கு அன்றாடம் கப்பம் செலுத்த வேண்டுமென வியாபாரிகளை அச்சுறுத்திப் பணம் பறித்து வருகின்றனர்.

இதனால் வியாபாரிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேலும் தெரிய வருபவை வருமாறு:-


பேலியகொடை மீன் சந்தைக்கு நாளாந்தம் சராசரியாகப் பத்தாயிரம் மீன் பெட்டிகள் கொண்டுவரப்படுகின்றன. ஒரு பெட்டிக்கு 25 ரூபா வீதம் அறவிடப்படுகிறது. இதனால் கப்பக் கும்பலின் நாளாந்த வருமானம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகிறது. மீன் வியாபாரிகளிடம் தலா 500 ரூபா நாளாந்தம் அறவிடப்படுகின்றது. அச்சம் காரணமாக வியாபாரிகள் இதுபற்றிப் பொலிஸாரிடம் முறையிடுவதில்லை.

இவ்வாறு நாளாந்தம் கப்பம் செலுத்துவதால் தமக்கு மீனின் விலையை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

உரிய நடவடிக்கைகள் மூலம் இவ்வாறான கும்பல்களை ஒழித்துக்கட்டி தங்களை நிம்மதியாக வியாபாரம் செய்ய விடுமாறு வியாபாரிகள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கூட்டாக வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

இது பற்றிய இரகசிய முறைப்பாடுகள் ஏற்கனவே கிடைத்துள்ளன என்றும் கடந்த திங்கட்கிழமை மீன்சந்தையின் கண்காணிப்புக்காகக் கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவின் விசேடகுழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

## அருள் கிடைக்கட்டும்...



தேர்ப்பவனி:- திருகோணமலை, திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருவிழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது கோணேஸ்வரப் பெருமான் மாதுமையம்பாள் சமேதரராகத் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருகின்றார். (204)

# உலகில் இம்மாதம் ஆறு பூகம்பங்கள்

## பேராதனை பல்கலை நிபுணர் குழு எச்சரிக்கை

உலகில்இந்த மாதத்தில்ஆறு பெரும் பூகம்பங்கள் ஏற்படலாம் என்று இலங்கையின்பேராதனைப்பல்கலைக்கழகநிபுணர்கள் குழுஒன்று எதிர்வு கூறியுள்ளது.உலகளாவிய ரீதியில் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய 05 ரிச்டர் அளவுகோலுக்கு மேற்பட்ட இந்த ஆறு பூகம்பங் களில் ஒன்று இந்தோனேசியாவில் ஏற்படலாம் என்றும் அது இலங் கையிலும் பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியற் கல்விப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் அத்துல சேனாரத்ன தலைமையிலான புவியியல் நிபுணர்கள் குழு இந்த ஆய்வை மேற்கொண்டது. இதன்போது ஏப்ரல் 3 ஆம் திகதிக்கும் 10ஆம் திகதிக்கும் இடையில் ஜப்பானையும், ஏப்ரல் 6 ஆம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் இடையில் சீனாவையும், ஏப்ரல் 10ஆம் திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடையில் துருக்கி, ஈரான், நியூசிலாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளையும் பூகம்பங்கள் தாக்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், ஏப்ரல் 16 ஆம் திகதிக்கும் 20 ஆம் திகதிக்கும் இடையில் ஜப்பானை மீண்டும் பூகம்பம் தாக்கும் வாய்ப்பு இருக்கின்றது என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். இந்தோனேசியாவில் ஏற்படக்கூடிய பெரும் பூகம்பத்தினால் இலங்கையிலும் அதன் பாதிப்பு உணரப்படலாம் என்று அவர்கள் கூறியுள்ளனர். (ஒ-சி)

## வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்கு

# புத்தளத்தில் உள்ள 8 ஆயிரம் அகதிகளை மன்னார் வரப் பணிப்பு

புத்தளத்தில் உள்ள மன்னார் அகதிகள் 8ஆயிரம் பேரை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்காக மன்னார் கச்சேரிக்கு வருமாறு மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார். அந்த மக்களுக்கு நேற்றுமுன்தினம் கடிதங்கள் மூலம் இந்த அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

மன்னார் சென்று தங்களைப் பதிவுசெய்யக்கூடியவாறு அங்கு தங்குமிட வசதிகள் எதுவும் இல்லை என்றும் தற்போது தாம் தங்கியுள்ள இடங்களுக்குத் தேர்தல் அதிகாரிகள் வந்து பதிவு நடவடிக்கையை எடுக்குமாறும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த மக்கள் இதை அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கவனத்துக்கும் கொண்டுவந்தனர். அமைச்சர் நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணையாளரைத் தொடர்பு கொண்டு மக்களின் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

இது தொடர்பாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்றுமுன்தினம் தெரிவித்தவை வருமாறு:-

மன்னாரில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் 20 வருடங்களாகப் புத்தளத்தில் அகதிகளாக உள்ளனர். அவர்கள் மீளக்குடியமர்வதற்கு மன்னார் சென்று அங்கு வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் புத்தளத்துக்குத் திரும்பி வந்துவிட்டனர்.

இந்த மக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்வாங்கப்படவில்லை. அவர்களின் பெயர்களைப் பதிவுசெய்வதற்காக அவர்களை மன்னாருக்கு வருமாறு மன்னார் கச்சேரியால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இது சாத்தியப்படக்கூடிய ஒன்றல்ல. மன்னாரில் தங்குமிட வசதிகளோ வேறு எந்த வசதிகளோ இல்லை. தேர்தல் அதிகாரிகள் இந்த மக்கள் உள்ள இடங்களுக்குச் சென்று அவர்களைப் பதிவு செய்வதே வசதியானதாக இருக்கும்.

இது தொடர்பாக நான் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளேன் - என்றார். (ஒ-சி)

# கொழும்பு பெரு நகரக் கூட்டுத்தாபனம் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறது ஐ.தே.க.

## நீதிமன்றம் செல்லவும் தயார் என்கிறது

கொழும்பு, ஏப்.7

கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் 5 உள்ளூராட்சிச் சபைகளை ஒன்றிணைத்து 'கொழும்பு பெரு நகரக் கூட்டுத்தாபனம்' ஒன்றை உருவாக்குவதற்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைக்கு ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை தற்போது இடம்பெற்றுவரும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதற்கான பேச்சுக்களில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சர்வதேச மட்டத்தில் அரசின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் என்றும் அக்கட்சி மேலும் தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள இடங்களில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் ஐந்தை உள்ளடக்கி கொழும்பு பெரு நகரக் கூட்டுத்தாபனம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதியும் வழங்கியுள்ளது.

இது தொடர்பான சட்ட மூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளது. இது மக்களின் உரிமையைப் பறிக்கும் செயலாகும். இந்தச் சட்ட மூலத்துக்கு எதிராக நாம் நீதிமன்றம் செல்வோம்.

கொழும்பு நகரம் தொடர்பாகப் பல சர்ச்சைகள் நிலவி வந்தன. கொழும்பு மாநகரசபைக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் பணியாற்றுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அரசு கொழும்பு மாநகர சபையைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விசேட ஆணையாளர் ஒருவரை நியமித்து கொழும்பு மாநகர சபையை ஆட்சி செய்கிறது.

இந்த ஆட்சி மக்களுக்கு எதிராகவே நடத்தப்படுகிறது. கொழும்பில் வீடுகளை உடைத்து மக்களை அப்புறப்படுத்தியுள்ளனர். கொழும்பில் 60 ஆயிரம் வீடுகளை உடைக்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

கொழும்பு பெருநகரக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட இருப்பதன் நோக்கம் என்னவென்று இதன்மூலம் நன்கு புரிகின்றது. கொழும்பில் உள்ள முக்கிய நிலங்கள் வியாபார நோக்கத்தோடு கண் வைக்கப்பட்டுள்ளன. அரசில் உள்ள தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இந்த நிலங்களை வழங்குவதற்காகவே இந்தக் கூட்டுத் தாபனம் அமைக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டுத்தாபனம் அமைப்பதற்கான யோசனை அடங்கிய சட்டமூலத்துக்கு நாம் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். இதற்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்.

உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தமது பிரதிநிதிகளின் ஊடாக மக்கள் வழங்கிய அதிகாரத்தைக் கொள்ளையடிப்பதாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பாகப் பேச்சுக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டால் அது மேற்படி பேச்சுக்களைப் பாதிக்கும். அத்தோடு சர்வதேச மட்டத்தில் அரசுக்குக் களங்கமும் ஏற்படும் - என்றார். (ஒ-சி)

# உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கான வெளிநாட்டு கடன்கள்



## விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு ஆதரவு

இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களமானது இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் செயற்றிட்டங்களுக்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

## கடன் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் யார்?

### 1ஆம் வகை

கம்பனியொன்றின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து மீள்கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வரும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும்.

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுகளை மேற்கொண்டுள்ள வணிகப் பொருள் ஏற்றுமதியாளர்கள்
- சுற்றுலா
- சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கு நிலையங்கள்
- இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம்
- கப்பற்படுத்தல்
- உள்நாட்டு வான் பயணம்

### 3ஆம் வகை

பின்வரும் வியாபாரங்களிலுள்ள தனி உடமையாளர்களுக்கு, உடமையாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- ஆலோசனைப் பணிகள்
- அரச அதிகாரசபைகளுடன் பதிவு செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வோர்
- விளம்பரம் செய்தல், பிரசுரித்தல், புகைப்படமெடுத்தல்
- விளையாட்டுகள் தொடர்பான பணிகள்
- நவீன உடைகளின் வடிவமைப்பு மற்றும் திரைப்படத் தொழில்
- பொழுதுபோக்குத் தொழில் (சங்கீதம், நடனம், நிகழ்ச்சி முகாமைத்துவம் போன்றவை)

### 2ஆம் வகை

பின்வரும் வியாபாரங்களில் ஈடுபடும் கம்பனிகளுக்கு கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் பெருந்தோட்டம்
- மீன்பிடி
- உணவு பதனிடல்
- கல்வி மற்றும் பயிற்சி
- வலு உருவாக்கம் மற்றும் கடத்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- மருத்துவமனைகள் மற்றும் நலம் மற்றும் நலக் கவனிப்புப் பணிகளின் வழங்கல்
- வர்த்தக ரீதியிலான வீடமைப்பு நிர்மாணம்
- வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம்
- பாரிய போக்குவரத்து
- சுற்றாடல் பாதுகாப்பு
- பல்பொருள் அங்காடி
- ஊர்திகளைப் பொருத்துதல்
- துறைமுகங்கள் மற்றும் துணைப் பணிகள்
- கைத்தொழில் பூங்காக்கள்
- நகர உட்கட்டமைப்பு (நீர் விநியோகம், சுகாதார மற்றும் வடிகால் செயற்றிட்டங்கள்)
- தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்குவோர்
- பாரிய கைத்தொழில்கள் மற்றும் தயாரிப்பு

## கடன் வழங்குவதற்கு தகுதியுடையவர்கள் யார் ?

- பன்னாட்டு வங்கிகள் அல்லது நிதிக் கம்பனிகள்
- பல்புடை நிதியியல் நிறுவனங்கள்
- கடன்பெறும் கம்பனிகளின் வெளிநாட்டு பங்குடமையாளர்கள் அல்லது தாய்க் கம்பனிகள்
- ஏற்றுமதிக் கொடுகடன் முகவர்கள்
- தனிப்பட்ட கடன்வழங்குநர்கள்: வதியும் நாட்டில் அவன்/ அவள் வரி செலுத்துவர் என்ற சான்றுடன் கூறப்பட்ட வங்கியுடன் அவன்/ அவள் கணக்கைப் பேணுவதாக அவனது/ அவளது வதியும் நாட்டின் வங்கியாளரிடமிருந்து உறுதிப்படுத்தலை அளிக்குமிடத்து

## கடன்களுக்காக குறித்துரைக்கப்பட்ட நியதிகள் எவை?

**கடன் பெறவேண்டிய ஆகக் கூடிய தொகை:** ஐ.அ.டொலர் 20 மில்லியன்

**மீள்கொடுப்பனவுக் காலப்பகுதி:** கடன் பெறுகைகளைப் பெற்ற திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும

**கடன் பெறுவதற்கான செலவு:** கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் கடன்களுக்கான பிரயோகிக்கத்தக்க வட்டி உள்ளிட்ட அனைத்துச் செலவுகளும் இரண்டாந்தரச் சந்தையில் தற்போதைய இலங்கையின் நாட்டுக்கான பன்னாட்டு முறி வீதம் + 200 அடிப்படைப்புள்ளிகளை விஞ்சுதலாகாது

## கடன் பெறக்கூடிய நோக்கங்கள் எவை?

தொழிற்படு மூலதனம், வியாபாரத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடு, கம்பனியை மீள அமைத்தல் அல்லது ஏற்கனவேயுள்ள வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

மத்திய வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் விபரங்கள் மற்றும் மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்பத்திரத்தினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமான **www.cbsl.gov.lk** இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து **011-2477358** அல்லது **011-2477000 – நீட்டம் 3126.**

பி. எச். ஓ. சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


# யாழ். விஞ்ஞான சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு

## இன்றும் நாளையும் அமர்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வுகள் இன்று காலை யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ளன. நேற்று முதல் நாள் அமர்வுகள் இடம்பெற்றிருந்தன.

**விஞ்ஞான சங்க மாநாடு**

இன்று காலை 9.30 மணிக்கு பிராந்தியத்தின் நிலைத்திருக்கும் அபிவிருத்தி எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கை பேராசிரியர் வி.பி. சிவநாதன் தலைமையேற்று ஆரம்பித்து வைப்பார்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணன் ''பிராந்தியத்தின் நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் சமூக வலுவூட்டலின் பங்களிப்பு'' எனும் தலைப்பில் உரையாற்றுவார். தொடர்ந்து பிராந்தியத்தின் நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் நிதித்துறையின் பங்களிப்பு பற்றி மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் எஸ்.சிறிதரன் உரை நிகழ்த்துவார்.

அதனை தொடர்ந்து ''நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் பொது சுகாதாரத் துறையின் பங்களிப்பு'' எனும் தலைப்பில் யாழ். பிராந்திய வைத்திய நிபுணர் எஸ்.சிவராஜா உரை நிகழ்த்துவார். இதனைத் தொடர்ந்து யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ரவீந்திரநாதன் ''பிராந்தியத்தின் நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் கல்வித்துறையின் பங்களிப்பு'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 1.30 தொடக்கம் 4.30 மணி வரை ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்படும். இதில் இவ்வருட வெளியீடாக 27 ஆய்வுக் கட்டுரைகள் நிபுணர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் தூய விஞ்ஞானப் பிரிவில் 10 கட்டுரைகளும் பிரயோக விஞ்ஞானப் பிரிவில் 9 கட்டுரைகளும் மருத்துவ விஞ்ஞானப் பிரிவில் 2 கட்டுரைகளும் சமூக விஞ்ஞானப் பிரிவில் 6 கட்டுரைகளும் உள்ளடங்கும் வாசிப்புகள் பௌதிகவியல்துறை கருத்தரங்கு மண்டபத்திலும் நூலகக் கேட்போர் கூடத்திலும் இடம்பெறும்.

**மூன்றாம் நாள் அமர்வுகள்**

மூன்றாம் நாள் அமர்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு இணைப் பேராசிரியர் இராஜேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும்.

இதில் சமூக விஞ்ஞான பிரிவுத் தலைவர் உதயகுமார் ''யாழ்ப்பாண மாவட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்திக்கான வாய்ப்புகள்'' எனும் தலைப்பில் உரையாற்றுவார். தொடர்ந்து ''உள்ளூராட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதியின் நிலைத்திருக்கும் அபிவிருத்தி'' எனும் தலைப்பில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவின் தலைவர் பேராசிரியர் கு.மிகுந்தன் ''விவசாயத்தில் காலநிலை மாற்றம்; சவால்களும் அவற்றை எதிர் கொள்வதும்'' எனும் தலைப்பில் தலைமைப் பேருரை ஆற்றுவார்.

இறுதியாக பாடசாலை விஞ்ஞான நிகழ்வின் கீழ் நடத்தப்பட்ட பல்வேறு போட்டி நிகழ்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ஓ-10)

# காரைநகரில் அலங்கார வளைவு

காரைநகருக்கான அலங்கார வளைவு ஒன்று காரைநகரின் நுழைவாயிலான வலந்தலையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அலங்கார வளைவுக்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கடந்த திங்கட்கிழமை நட்டு வைத்தார்.

சுமார் 15 லட்சம் ரூபா செலவில் இந்த வளைவு அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-250)


## அரிய சந்தர்ப்பம் !

STUDY IN SWEDEN

ஐரோப்பாவின் அழகிய சுவீடன் நாட்டில் மேற்கல்வி - ஆங்கில மொழியில்

பாட நெறிகள்

- (Accounting / Finance)
- (Business Management)
- (Travel, Tourism & Hospitality)
- (Information Technology)

"கல்லூரி நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தடையற்ற வேலை வாய்ப்பு"

We Guide you on எமது வழிகாட்டல்

- கல்லூரி அனுமதி
- விசா நிதி நிலை ஏற்பாடுகள்
- இருப்பிட வசதி
- பிரயாண ஒழுங்குகள்

ROTEC
RISHSI Overseas Travel & Education Centre
2nd Floor, No. 343, Galle Road, Colombo 04. Sri Lanka
Tel: 0112589277 / 011 2589179
E- mail : rotec@sltnet.lk

JAFFNA - Mr. Panchalingam
Contact No: 0776565258
BATICALOA - Mr Dharmalingam
Contact No: 0777273543

FLEX Graphic


# மரண அறிவித்தல்

## மன்மதராஜன் அனுலா (செல்வதி - சுவீடன்)



மண்டைதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவீடனை வசிப்பிடமாகவும் கொண்ட அனுலா (செல்வதி) சுவீடனில் கடந்த 02.04.2011 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தவநாயகம் (மண்கும்பான்) - தேவநாயகி (மண்டைதீவு) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும், மன்மதராஜனின் பாசமிகு மனைவியும், தனுசிகா, வினுசிகா, கீர்த்தனா,மாதீஸ் ஆகியோரின் அன்புத் தாயும் கமலேஸ்வரன், கேதீஸ்வரன், சுகிர்தா (வாசுகி - இத்தாலி), சதீஸ்வரன் (சுவீடன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாநந்தினி, கார்த்திகா, ஸ்ரீபவன், மனோகரன், மர்மயோகன் (சுவீடன்), மன்மதாசன், மன்மதராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை எதிர்வரும் (10.04.2011) ஞாயிற்றுக்கிழமை சுவிடனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். சகோதரன் கமலேஸ்வரன் (றஞ்சன்) இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தாவடி கிழக்கு,
கொக்குவில்.
(ஐந்து வேம்படி வைரவர் கோவிலடி)

தகவல்: சகோதரர்கள்
த.கமலேஸ்வரன்,
த.கேதீஸ்வரன்

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1283 நீலம்

கும்பம்

19 26 28 31

05-04-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,122,350/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 253,103 | 20/- | 5,062,060/- |
| 2 இலக்கங்கள் | 23,260 | 40/- | 930,400/- |
| 1 இல. + லக்கினம் | 23,133 | 60/- | 1,387,980/- |
| 2 இல. + லக்கினம் | 2,105 | 200/- | 421,000/- |
| 3 இலக்கங்கள் | 606 | 1000/- | 606,000/- |
| 3 இல. + லக்கினம் | 62 | 10,000/- | 620,000/- |
| 4 இலக்கங்கள் | 02 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 3,122,350/- | 3,122,350/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 12,549,790/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 676 | | 736,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 302,948 | | 13,285,790/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

## இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்

தனுசு

39 40 42 52

ஜக்பொட் பரிசு ரூபா. 500,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 672 | 500/- | 336,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 500,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 676 | | 736,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 600,000/-



## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

05.04.2011

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2379

வெற்றி எழுத்து: A வெற்றி எண்கள்: 7 6 9 5 5 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | அமைப்பு | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A 7 6 9 5 5 1 | ரூபா. 10,706,296/= | - |
| 1 பரிசுகள் | 7 6 9 5 5 1 | ரூபா. 2,000,000/= | 02 |
| 2 பரிசுகள் | 6 9 5 5 1 | ரூபா. 100,000/= | 14 |
| 3 பரிசுகள் | 9 5 5 1 | ரூபா. 10,000/= | 131 |
| 4 பரிசுகள் | 5 5 1 | ரூபா. 1,000/= | 1364 |
| 5 பரிசுகள் | 5 1 | ரூபா. 100/= | 13638 |
| 6 பரிசுகள் | 1 | ரூபா. 20/= | 135199 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | அமைப்பு | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 7 6 9 5 5 | ரூபா. 10,000/= | 12 |
| 8 பரிசுகள் | 7 6 9 5 | ரூபா. 1,000/= | 129 |
| 9 பரிசுகள் | 7 6 9 | ரூபா. 100/= | 1374 |
| 10 பரிசுகள் | 7 6 | ரூபா. 50/= | 13622 |
| 11 பரிசுகள் | A | ரூபா. 20/= | 54035 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 14,289,980.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு Rs. 10,995,390.00

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. Hotline: 2433631 www.nlb.lk


# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.7

கரணவாய் வேதாரணியேஸ்வரா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, கட்டட நிர்மாணத் துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் வி.செ. சுவாமிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக பொறியியலாளர் இளையதம்பி சாந்தசொரூபனும், சிறப்பு விருந்தினராகக் கரவெட்டி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி பாலகிருஷ்ணன் கலைவாணியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ற)

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஏப்.7

இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் அதனோடிணைந்த எச்.ஐ.வி. எயிட்ஸ் போன்ற பிரச்சினைகளுக்கான வாழ்க் கைத்திறன் பயிற்சிப்பட்டறை எதிர் வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை சுகாதாரத் தொண்டர் கழக உறுப்பினர்களுக்கு நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் கோப்பாய் ஆதார வைத்தியசாலையின் டாக்டர் வி.நாகநாதன், யாழ். தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிப் பொறுப்பாளர் ஜி.நக்கீரன், யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சிவபாலன், கோண்டாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என். பிறேம்குமார், வட்டுக்கோட்டைமேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஜி.சேரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்வர்.

(ம-313)


## S.L.E.A.S. III (திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட)
போட்டிப் பரீட்சை பயிற்சிக் கருத்தரங்கு (தமிழ், ஆங்கில மொழி மூலம்)

1. நுண்ணறிவு
2. கல்வி நிர்வாகம் சார்ந்த விடய ஆய்வு
3. கிரகித்தல்

திகதி : 10.04.2011/11.04.2011 (இருநாள்கள்)
நேரம்: காலை 9 மணி – பி.ப. 4 மணி வரை
இந்தப் பயிற்சிக் கருத்தரங்கு கல்வி நிர்வாகத் துறையில் அனுபவம் வாய்ந்த சிறப்பு விரிவுரையாளர்களினால் நடத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
**E Tec Jaffna**
ரெக் ஸ்ரீ லங்கா, மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி, கோப்பாய்.
தொ.பே.: 0783619545



## WANTED

Pavement Engineer
Material Engineer
Draughtsman :- (experienced and ladies preferred)
Office Assistant:- (Ladies preferred)
*Salary Negotiable.*

* Name:- Michael Ouyang.
* T.P:- 0778454272.
* Company:- China Railway.

Address:-
Sivan Road, Urumparai East, Urumparai, Jaffna.


## கண்ணீர் அஞ்சலி



### தம்பு நடராசா

எமது பாடசாலை ஆசிரியை செல்வி ந.பிருந்தா அவர்களின் அன்புத் தந்தை தம்பு நடராசா அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர். ஆசிரியர் கழகம்.

(401(வ)577480)


தேசத்தின் ஆசீர்வாதத்துக்காக தேவ சமூகத்தில் 2 நாள்கள்

## இருளிலிருந்து ஒளிக்கு

உங்கள் வாழ்க்கையில் இருள் சூழ்ந்துள்ளதா?
கவலை வேண்டாம். நீங்கள் தேடும் ஒளி இயேசுவிடம் உண்டு.

## இயேசு தேற்றுகிறார்
## சுகமளிக்கும் ஆராதனை



குமரபுரம் மகா வித்தியாலய மைதானம்
2011 ஏப்ரல் 8, 9, 10
மாலை 5 மணி
செய்திப் போதகர் V.M.ராஜா
தொடர்பு: P.S.அல்வினியாஸ்
பரந்தன்
0778692095

இயேசு தேற்றுகிறார் ஊழியம் பணிமனை, கிருலப்பனை, கொழும்பு.06
தலைமைக் காரியாலயம். 0112512870, 0772516998



## NComputing™

வடமாகாண NComputing ஏக விநியோகஸ்தர் மற்றும் அதிகாரம் பெற்ற பங்காளர்கள் ஆகிய BNS நிறுவனம் வழங்கும் சிறப்பு சேவைகள்,

நீங்கள் உபயோகிக்கும் NComputing Original தான என்பதனை உங்கள் இடத்திற்கு வந்து இலவசமாக உறுதி செய்கின்றோம்

System Builders ற்கான இலவச NComputing தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குகின்றோம்

உங்கள் நிறுவனங்களில் பயன்படுத்தி பார்ப்பதற்கு NComputing Units மற்றும் Upgrading க்கு தேவையான வடிவமைப்பு மற்றும் ஆலோசனைகளை இலவசமாக வழங்குகின்றோம்.




பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கான மிகச் சிறந்த தீர்வு

CeBIT · MARKET SHARE LEADER · INDIA · Gartner Cool Vendor Award

**BUSINESS NETWORK SYSTEM**
180/1 Point Pedro Road, Jaffna.
Tel:- 0212220222, 0215671819
BNS



### வீடு வாடகைக்கு

ஊரெழு கிழக்கு, பலாலி வீதியில் அமைந்துள்ள 4 அறை, 2வரவேற்பறை மற்றும் சமையலறை, குளியலறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது) தொடர்பு:0779937402, 0785363954

### விற்பனைக்குண்டு

Lecture Hall Chairs, Net cafe Cabin, Wheel Chairs என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776172740

### வீடு, காணி விற்பனைக்கு

தாவடிப் பிள்ளையார் கோயிலடி அரசடி வீதியில் முதலாவது ஒழுங்கையில், 3 அறை, களஞ்சிய அறை, நீர்த்தாங்கி, கொமேட் வசதி, குளியல் அறையுடன் திருத்தப்பட்ட புதிய கிணற்றுடனும் 3½பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி, வீடு விற்பனைக்குண்டு. நவீன வசதி கொண்ட வீடு இம்மாதம் 22.04.2011 வரை தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 0750426886

### தவறிவிட்டது

உடுப்பிட்டி மேற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த கனகலிங்கம் கோகிலவர்ணன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (823271000V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: கீர்த்திகா புடைவையகம், உடுப்பிட்டிச் சந்தி, 0778998123



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
**Post of Assistant Lecturer in Hindu Civilization**

University of Jaffna will entertain applications upto 20th **January 2011** from suitably qualified persons for the above post **on contract basis.**

**Salary:**
Assistant Lecturer Rs.25, 125/- per month fixed

* In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

Registrar
07.04.2011

**விற்பனைக்கு**
பாவித்த நகைக் கடைக்குரிய அலுமாரி, திண்டுக்கல் Iron Safe கதிரை மற்றும் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0756548793
0774316132

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்ட னவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழை யுங்கள் 0777483840 (Computer Repair)

**விற்பனைக்கு**
Nissan Double Cab -2 wheel brand new 408 Floor board Gear higher offer 0716320118, 0714398414,0773700004, 0774084826

## 'ருவென்ரி -20' கிரிக்கெட் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.7

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 4 ஆம் வருடமாக நடத்தும் நோயல் விம லேந்திரன் வெற்றிக் கிண்ண 'ருவென்ரி -20' கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

இன்று ஆரம்பமாகும் இந்தப் போட்டி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை இந்த 'ருவென்ரி -20 'கிரிக்கெட் போட்டியில் கண்டி, கொழும்பு, குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அணிகளும்கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களை விட இம்முறை இந்தப் போட்டியைச் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிமேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

'ருவென்ரி -20' கிரிக்கெட் ஆட்டங்கள் மூன்று தினங்களும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக் கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, புனித பரி.யோவான் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன. (த-26)

## அரையிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.07

யாழ். பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட பதிவுசெய்யப் பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்த அரையிறுதி ஆட்டம் இன்று வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விளையாட்டு உத்தியோகத்தர் நித்தில நாயகம் தெரிவித்தார். (த-23)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தீர்க்கசுமங்கலி

**தசக்கிரீபன்(நக்கீரன்) சுபாசினி**

மலர்வு 25.07.1976
உதிர்வு 30.03.2009

இறைவரங்களால் எம்மோடு
இன்புற்றிருந்த உயிர் தீர்க்கசுமங்கலியே
இரண்டாண்டுகள் ஓடி மறைந்தனவே
எம் சுபாசினியே
புத்தகம் வழங்கும் பணிக்கு
புத்துயிர் தந்த உறவே
ஐந்து செல்வங்களும் உன் பிரிவால்
துடிக்குதம்மா...
பந்த பாசம் என்றும் எம் இல்லத்திலே
உன் நினைவு அகலாது...
உனக்காக எம் பிரார்த்தனைகள்
எக்காலமும் தொடரும்


**- குடும்பத்தினர்.**
இல.174, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(A57423) (28-27-24)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

24.03.2011 அன்று குருப்பட்டம் பெற்ற

**சிவஸ்ரீ வைத்திலிங்கஐயர் இராமேஸ்வர குருக்கள்**



அவர்களை ஊர்போற்றும் உத்தமனாய் என்றும் உயர்வுடன் வாழ்ந்து, குருத்துவத்தில் மகத்துவம் காண பல்லாண்டு காலம் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
சகோதரன்
சுப்பர்மடம் முனீஸ்வரர் ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ வை.இராஜேஸ்வரகுருக்கள்
சாந்திமதி தம்பதியினர், தும்பளை.

## விண்ணக வாழ்வின் ஐந்தாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 19 . 11 . 1946



மறைவு 02 . 04 . 2006

திதி- சதுர்த்தி

**அமரர் செல்வராசா சரஸ்வதி**

பாசமுடன் இணைந்து பண்புடனே வாழ்ந்தீர்கள் கனிந்த பேச்சும் நேச மொழியும் காதுகளில் கேட்கிறதே! கடிதில் எமைப் பிரிந்து எங்கு சென்றீர்கள்? மறக்கத்தான் முடியவுமில்லை, உங்கள் நினைவுகளை துறக்கவும் முடியாது கலங்கு கின்றோம் இங்கே நாம் உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
108/9, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

# A.N.குழந்தைவேலு

(ஓய்வுபெற்ற அரச நில அளவையாளர்)



காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கவுடான வீதியில் தற்போது வசித்து வந்தவருமான அ.நா. குழந்தைவேலு நேற்று (06.04.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அருமை மகனும் காலஞ் சென்றவர்களான நல்லதம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவராணியின் பாசமிகு கணவரும் அன்புச்செல்வன் (கணக் காளர், மாலைதீவு), அருட்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவீந்திரன் (Hatton National Bank, Kotahena), சிவகிருபா ஆகியோரின் அன்பு மாமனும் கேசவன், ஆருசன், ராஜினி, அஸ்வினி ஆகியோரின் பாசமிக்க பாட்டனாரும் காலஞ் சென்ற சுபத்திரை மற்றும் கிருஷ்ணசாமி (மலேசியா) அன்புத் தம்பியும் காலஞ்சென்ற நேசம்மா மற்றும் லீலாவதி, வைத்தியகலாநிதி குணரத்தினம் (சிங்கப்பூர்), கமலாவதி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக் கப்பட்டு இன்று (07.04.2011) வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பி.ப 4 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*24/14B, ரசிகா மாவத்தை,*
*கவுடான வீதி,*
*தெகிவளை.*
*2725721, 0773173584.*

(3045) (35)

தகவல்:
கு. அன்புச்செல்வன் (மகன்)

## குருநகர் மீனவருக்கு அடித்தது யோகம்

வண்ணை, ஏப். 07

குருநாகரில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆழ்கடல் தொழிலுக்குச் சென்ற 15 இயந்திரப் படகுகளுக்கு நல்ல மீன் பாடு கிடைத்துள்ளதாக தெரிய வருகிறது.

பத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேலாக மீன்பிடிபட்டுள்ளது. ஏனைய தொழில்களுக்கும் 80ஆயிரம், 90ஆயிரம், 70ஆயிரம், 50 ஆயிரத்துக்கும் குறைவில்லாமல் மீன்கள் பிடிபட்டுள்ளன. (ஒ-160)

## நீங்காத நினைவில் 1ஆம் ஆண்டு

மலர்வு 1958 ★ 07 ★ 30



உதிர்வு 2010 ★ 03 ★ 19

**அமரர் செல்லன் குழந்தைவேலு**

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
கண்ணின் மணிபோல் எமைக் காத்து
கண்ணிமையாக வாழ்ந்து - எம்மை
ஆறாத் துயரில் மூழ்க விட்டு
மீளாத் துயில் கொண்ட - எம் தெய்வத்தின்
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தவசிகுளம், மிருசுவில். (3054) (35) குடும்பத்தினர்.

# தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தில் புத்தாண்டுக்குள் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.7

குடாநாட்டில், வலி. வடக்குப் பகுதியில் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் சித்திரைப் புத் தாண்டுக்கு முன்னர் மக்கள் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என்று யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அறிவித்துள்ளார்.

வலி. வடக்குப் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் உதயனுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:- இளவாலை வடக்கு, வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கண்ணிவெடியகற்றும் பணிகள் பூர்த்தியடைந்து அதற்குரிய சான்றிதழ் கையளிக்கப்பட்டுள்ள தந்தை செல்வாபுரம், தெல்லிப் பழைச்சந்தி, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன் பக்கம் ஆகிய இடங்களில் மக்கள் மீள்குடியமர்வதற்கான ஏற்பாடுகளைப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்துக்கு முன்னர் இந்தப் பகுதிகளில் மக்கள் மீள் குடியமர்த்தப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## சடலம் வைத்தியசாலையில்

கரையொதுங்கியதாகத் தெரிவித்து 45 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் நேற்று மாலை 6 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை கடற்படையினர் மீட்டுத் தம்மிடம் வழங்கிய சடலத்தையே தாம் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர் என்று பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர். (உ-78)

## பிளேக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு சென்றுள்ள அவர், பரகுவே மற்றும் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுவிட்டே நாடு திரும்புவார் என்று கூறப்படுகிறது. எனினும் பிளேக்கின் பயணத்தைப் பிற்போடச் செய்யும் வகையிலேயே திட்டமிட்ட காலபகுதிக்கும் அப்பால் அவர், லண்டனில் தங்கியிருக்கிறார் என்று கருதப்படுகிறது.

ஒபாமா அரசின் கடுமையானதொரு செய்தியுடன் பிளேக் கொழும்பு வரவிருக்கிறார் என்று செய்திகள் வெளியாகி யிருந்தன. இந்த நிலையிலேயே இலங்கை அரசு பிளேக்கின் பயணத்தைப் பிற்போட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (உ)

## மஹிந்த ராஜபக்ஷ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள துணைச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக், இலங்கை தொடர்பான அமெரிக்க நிலைப்பாட்டை அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையின் வெளிவிவகாரக் குழு முன்னிலையில் நேற்று விளக்கினார்.

கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடம் மற்றும் உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்கான பங்களிப்பு என்ப வற்றின் காரணமாக தீவிரவாதம், ஆள்கடத்தல், கடற்கொள்ளை என்பவற்றுக்கு எதிரான போராட்டத்தில் தன்னை காத்திரமாக நிலை நிறுத்தியது என்று தெரிவித்தார் பிளேக்.

''ஆனால், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க அரசு கவலையடைந்துள்ளது. இலங்கையின் ஜனநாயக அமைப்புக்களையும் நடைமுறைகளையும் மனித உரிமை மீறல்கள் பல வீனப்படுத்துகின்றன. அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் கடைசி மாதங்களில் முன்னெடுக்கப்பட்ட விதம், இலங்கை விடயத்தில் நாங்கள் முழு அளவில் ஒத்துழைத்துச் செயற்படுவதற்குத் தடையாக இருக்கிறது'' என்றார் பிளேக். குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் இலங்கை அரசு தீவிர அக்கறை காட்டவேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது என்றும் அவர் கூறினார்.

மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் ஆட்சி அதிகாரம் விடயங்களிலும் முன்னேற்றமும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத வரையில் இலங்கைக்கான உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கும் என்றும் அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

குறிப்பாக, இராணுவ ரீதியில் இரு நாடுகள் இடையில் காணப்படும் ஒத்துழைப்பு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறும் பொறிமுறையை இலங்கை அரசு ஏற்படுத்தவில்லை என்றார் அது அனைத்துலக விசார ணைக் குழு ஒன்றை அமைப்பதற்கான அழுத்தங்களை அதி கரிக்கும் என்பதையும் குறிப்பிட பிளேக் மறக்க வில்லை. (உ)

## முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப் பினர்கள். எனினும், முதல்வரும் ஈ.பி.டி.பியினரும் தன்னிச்சையாகச் செயல்படுகின்றனர். ஜனாதிபதியின் பெயரைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

அவர்களின் இந்த முறைகெட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரிடம் இதனை நான் ஆதாரபூர்வமாகத் தெரிவித்திருந்தேன். எனினும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை.

மாநகரசபையில் இடம்பெறும் ஊழல் கள், தன்னிச்சையான நடவடிக்கைகள் குறித்து நான் கூடிய கவனம் செலுத்தியமையால் எனக்கு எதிராகப் பொய்யான பிரசாரங்களை ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இப்போதுகூற ஆரம்பித்துள்ளனர்.

பல தடவைகள் நான் மிரட்டப்பட் டுள்ளேன். இவற்றுக்கு நான் அஞ்சவில்லை.

ஆனால், அரச கட்சியின் பெயரைப் பயன்படுத்தித் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அனுமதிக்கப்போவதில்லை. தவறுகள் எங்கு நடந்தாலும் அதைத் தட்டிக்கேட்க நான் தயங்கப்போவதில்லை.

இனிவரும் காலங்களில் நான் ஜனாதிபதியின் கீழ் நேரடியாக இயங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் வழிகாட்டலில் அவருடன் இணைந்து செயற்படவுள்ளேன்.

அத்துடன், மாநகர சபையின் அபிவிருத்தி குறித்த நடவடிக்கைகளில் தனித்து இயங்கத் தீர்மானித்துள்ளேன்.

அத்துடன், சபையின் 3ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் முதல்வரின் தனிப்பட்ட தேவைகளுக்காக நிறுத்தப்பட்டது. இதை நான் வன்மையாகக் கண்டிப்பதுடன், மேலதிக நடவடிக்கை எடுக்க உள்ளேன் - என்றார். (த-7)

## மும்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணை தூதுவர் உபேக்ஷா சமரதுங்க, ''ஜனாதிபதி மற்றும் அவருடன் வந்தவர்களுக்கான இருக்கைகளை வெளிவிவகார அமைச்சே ஒழுங்கு செய்தது. அவர்களுக்கு இன்னும் அதிக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தால் மேலும் மகிழ்ச்சியடைந்திருப்போம்'' என்று தெரிவித்துள்ளார்.

இறுதியாட்டத்தைக்காண இலங்கைக்கு 40 இருக்கைகளை ஒதுக்கித் தருமாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஊடாக இந்தியக் கிரிக்கெட் சபைக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் குறுகியகால இடைவெளிக்குள் அதனை ஏற்பாடு செய்யமுடியாது போனதால் 10 இருக்கைகளை மட்டுமே இந்திய அதிகாரிகள் ஒதுக்கினர்.

''துடுப்பாட்டச்சபைத் தலைவரின் அறையில் இரு நாடுகளின் தலைவர்களுக்கும் தலா 10 ஆசனங்களை மட்டுமே எம்மால் ஒதுக்கமுடிந்தது'' என்று கூறினார் இந்திய துடுப்பாட்டச் சபையின் பிரதான நிர்வாக அதிகாரி ரத்னகார் ரெட்டி.

அதேவேளை, சில வாரங்களுக்கு முன்னரே இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு சார்பில் 40 ஆசனங்களை வாங்கியிருந்தது. அவற்றைப் பயன்படுத்துமாறு இலங்கைப் பரிவாரத்தில் சிலருக்கு அறிவிக்கப்பட்டது.

இறுதி ஆட்டம் ஆரம்பமாவதற்குச் சற்று முன்னர் குறைந்தது இலங்கை அணி வீரர்களையாவது சந்திப்பதற்கு ஜனாதிபதி விரும்பினார். அவரது வேண்டுகோளை இந்திய அதிகாரிகள் நிராகரித்து விட்டனர்.

இதனால் சிறிலங்கா அதிபரும் அவரைச் சார்ந்தவர்களும் பெரும் அதிர்ச்சியடைந்ததாக மகாராஷ்டிரா அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மொகாலியில் இந்திய, பாகிஸ்தான் பிரதமர்கள் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாக மைதானத்தில் அணி வீரர்களைச் சந்தித்திருந்தனர்.

போட்டி தொடங்க முன்னர் ஜனாதிபதி அணி வீரர்களைச் சந்திக்கதிட்டமிட்டிருந்ததை உறுதிசெய்துள்ள மும்பையிலுள்ள இலங்கைத் துணைத்தூதுவர் சமரதுங்க, கடைசி நேரத்தில் இந்திய அதிகாரிகள் அந்தத் திட்டத்தை மாற்றி விட்டனர் என்று கூறினார்.

ஆட்டத்தில் வெற்றி பெற்ற இந்திய அணியுடன் ஓர் ஒளிப்படம் எடுக்கும் வாய்ப்புக் கூட மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவில்லை என்றும் அவர் விசனம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, புதுடில்லியில் உள்ள இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, ''இந்திய அரசினால் மகிந்த ராஜபக்ஷ அழைக்கப்படவில்லை. அவர் தனது விருப்பின் பேரிலேயே இங்கு வந்தார். பாகிஸ்தான் பிரதமர் கிலானி, மொஹாலிக்கு எமது விருந்தினராகவே வந்தார். அதனால் அவருக்கு மைதானத்தில் வீரர்களைச் சந்திக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது'' என்று அவர் தெரிவித்தார் என 'மும்பை மிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

## நல்லிணக்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு வருடங்களில் நாங்கள் இதுவரை செய்தவைகள் குறித்துப் பெருமைப்படுகின்றோம்'' என்றார் அமைச்சர் பீரிஸ். யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட மேற்கு நாடுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், அதிகாரிகள் ஆகியோர் அங்கு இடம்பெற்றுள்ள அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகள் குறித் துத் திருப்தி தெரிவித்துள்ளனர் என் றும் பீரிஸ் கூறினார்.

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''தீர்வு தொடர்பில் கூட்டமைப்புடனும் தமிழக்கட்சிகளின் அரங்கத்துடனும் அரசுபேச உள்ளது. அனைத்துக் கட்சிகளுடனும் பேசித்தீர்வு காண்பதே அரசின் நோக்கம். ஈ.பி.டி.பியினருடன் புது வருடத்துக்குப் பின்னர் அரசு பேச்சு நடத்தும். வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளதாலேயே ஈ.பி.டி.பியுடனான பேச்சு காலதாம தமாகின்றது'' - என்றார் அமைச்சர் டக்ளஸ். (உ)

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை கந்தப்பிள்ளை



தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், ஈஞ்சடிவைரவர் கோயிலடி உடுவில்தெற்கு, மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட முருகுப்பிள்ளை கந்தப்பிள்ளை நேற்று (06.04.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - சிதம்பரம் தப்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பெரியபிள்ளை தம்பதியரின் மருமகனும் இராதாகிருஷ்ணன், இராமகிருஷ்ணன், ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகுமாரி, சுஜிதா ஆகியோரின் மாமனும், காயத்திரி, தருண், தர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை பொன்னம்மா மற்றும் கதிரவேலு ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஞ்சடி வைரவர் கோயிலடி,
உடுவில் தெற்கு, மானிப்பாய். (சி/577425)

தகவல்:
குடும்பத்தினர்.

## இவரைக் காணவில்லை



கக்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த

**சங்கரப்பிள்ளை மைத்திரேகி**

(வயது-17) என்பவரை 04.04. 2011 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியிலிருந்து காணவில்லை. இவர் பிறவுண் கலர் பாவாடையும், செம்மஞ்சள் நிற மேலங்கியும் அணிந்திருந்தார். இவரது இரண்டு கைகளும் கட்டையான கைகள். இவரைப் பற்றிய தகவல்கள் அறிந்தவர்கள் 0773000834 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

திருவருள் ஸ்ரோர்ஸ்,
கண்டிவீதி, கொடிகாமம். (சி/577425)

தகவல்:
வை.சங்கரப்பிள்ளை (தந்தை)

## மரண அறிவித்தல்

### இறப்பியர்பிள்ளை பிலிப் ஜெயநாயகம்



வயாவிளானைப் பிறப்பிடமாகவும், பிரம்படி லேன், 2ஆம் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியர்பிள்ளை பிலிப் ஜெயநாயகம் நேற்று முன்தினம் (5.4.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இறப்பியர்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் இளைய மகனும், இந்திராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை ஆலோசகர் - தமிழ்த்துறை, தீவகம்) அன்பு கணவரும் கிருஷ்ணியின் (கொழும்பு பல்கலைக்கழகம் - புவியியல்துறை 3ஆம் வருடம்) பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இமானுவேல், சிங்கராசா, வேதநாயகம், செல்வநாயகம், அருளாநந்தம், காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் சகோதரனும், மனோன்மணி, புஸ்பராணி, தவமணிதேவி (சுவிஸ்), நந்தினிதேவி (ஜேர்மனி) சாந்தினி தேவி (சுவிஸ்) ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2011) வெள்ளிக் கிழமை நடைபெற்று மு.ப.11 மணியளவில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/12, பிரம்படி 2ஆம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (சி/577425)

தகவல்:
மனைவி, மகள்.

# அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவா கிழக்கில் திடீர் தேடுதல் வேட்டை?

## நாடாளுமன்றில் அரியநேத்திரன் கேள்வி

கொழும்பு, ஏப்.7

கிழக்கு மாகாணத்தில் நேற்றுமுன் தினம் அரச படையினரால் மேற்கொள் ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடு தல்கள் அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கையா? நாளை (இன்று) அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான ஆதாரங்களைத் திரட்டும் ஒரு முன்னோடி ஏற்பாடா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின்நாடாளுமன்றஉறுப்பினர்பா.அரியநேத்ந்திரன் நேற்று கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற உணவு (திருத்தம்) சட்டமூலம் மற்றும் ஏல சந்தைப்படுத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

நாடாளு மன்றில் நாளை (இன்று) அவசரகாலச் சட்டம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் சில பிரதேசங்களில் அரச படையினர் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பினால் கிழக்கு மாகாணத்திலுள்ள விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட விவசாயிகள் செல்லவில்லை. நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பானது நாளை (இன்று) அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்கத் தேவையான ஆதாரங்களைத் திரட்டுவதற்காகவா மேற்கொள்ளப்பட்டது? இது அரசின் திட்டமிட்ட செயலா என்று கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன். (ஒ-05)

2013 A/L (SAT, SUN)
பௌதிகவியல் - By.கருணாநிதி
பொறியியல் 7.15 A.M (தமிழ் மூலம்) 3.00 P.M (ஆங்கிலம் மூலம்) ஆரம்பம் - 09.04.2011
NEW EDUCATION WORLD. (ஆனைப்பந்தி)

**மகாதேவா ஆச்சிரம இல்லத்துக்கு இரணைமடுக் குளத்தின் கீழான தண்ணீர் பங்கு - ஏலவிற்பனை 10.04.2011**

மேற்படி ஏலம் 10.04.2011 மு.ப10 மணிக்கு ஜெயந்திநகரில் உள்ள மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தில் நடை பெறும். ஒரு ஏக்கருக்குரிய (1Acre) ஆகக்குறைந்த விலையான 7500/= ஏலம் விடப்படும். ஏலத்தில் எடுப்பவர்கள் அன்றைய தினமே முழுப்பணத்தினை செலுத்திப் பங்கினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தி.இராசநாயகம், தலைவர். தொ.பே.இல - 0772463027, 0773868566 மகாதேவா சைவ சிறார் இல்லம், கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை இராஜேஸ்வரி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராஜேஸ்வரி நேற்று முன்தினம் (05.04.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் (லண்டன்), நல்லநாதன் (மலேசியா), இராஜதுரை (மலேசியா), வடிவேலு (மலேசியா), மகேஸ்வரி (மலேசியா), புவனேஸ்வரி (மலேசியா) மனோரஞ்சிதம் மற்றும் செல்வநாயகி (வட்டுக் கோட்டை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமிர்தலிங்கம் (சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் பொறியியலாளர்) பாரதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவசேகரா, நிர்மலசேகரா, சறோஜா, கந்தகுமார், நந்தகுமார், விஜயசேகரா, ஜெயராணி (ஜேர்மனி), விமலராணி (பிரான்ஸ்), வைரவகுமார் (பிரான்ஸ்) சசிக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும், சுரேஸ்குமார் (லண்டன்), ரமேஸ்குமார் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2011) வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.அமிர்தலிங்கம்,
(முன்னாள் பொறியியலாளர் இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்)

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (சி/577427)

## விபத்தில் சிப்பாய் சாவு

கிளிநொச்சி,ஏப்.7

கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் இரணைமடுச் சந்திக்கருகில் நேற்றுக் மு.ப. 10.30 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் படையினர் ஒருவர் உயிரிழந்தார்.

முறிகண்டிப் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்த படையினரின் மோட்டார் சைக்கிளும் கிளிநொச்சியிலிருந்து கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

சம்பவத்தில் மோட்டர் சைக்கிளை ஓட்டி வந்த சிப்பாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் - பின்னால் அமர்ந்திருந்து வந்த சிப்பாய் படுகாயமடைந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (உ-10)

### கொடிகாமத்தில் சிசுவின் சடலம்

யாழ்ப்பாணம், ஏப்.7

கொடிகாமம் பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து பிறந்த சிசு ஒன்றின் சடலம் நேற்று மாலை 6.30 மணியளவில் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் இது தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றனர். (உ-78)

**நெல்லியடி அபான்ஸ் கிளையினர் புதுவருடத்தை முன்னிட்டு நடத்தும்**

**முழுநாள் களியாட்ட விழா**



...வாருங்கள் "கிரிக்கெட் வாசி" களாக,

★★ யாழ்.குடாநாட்டில் வேறெங்கும் கண்டிராத 10% விலைக்கழிவுடன் வீட்டு உபகரண, இலத்திரனியல் சாதனங்களின் கண் காட்சியும் விற்பனையும்,

★★பெண்களுக்கான இலவச சமையல், அழகுக் கலை பயிற்சி நெறிகளும், பல்வேறு போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும்.

★★ நடமாடும் குளிரூட்டப்பட்ட சொகுசு ஆசன வசதி செய்யப்பட்ட அகலத்திரை "சினிமா" வாகனம்.

★★ சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்களுக்கான வயதுப் பிரிவில் தனித்தனி போட்டி விளையாட்டுக்களும் பெறுமதியான பரிசில்களும்.

★★ முன்னிரவில் ஆரம்பமாகி நள்ளிரவு வரை தொடரும், அதிரவைக்கும் D.J இசையுடன் கூடிய நடன நிகழ்ச்சி,

இடம்:- குஞ்சர் கடை மைதானம் (இராணுவ முகாம் முன்பாக)

காலம்:- இன்று (07.04.2011) வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் இரவு 10 மணி வரை.
பிரவேசம் முற்றிலும் இலவசம்!!

போட்டிக்கான பதிவுகளுக்கு அழையுங்கள்
0776450332, 0775122911

சிற்றுண்டி, குளிர்பான வகைகளுடன் "அபான்ஸ்" ரீ-சேட், தொப்பி என்பவற்றை வெல்லும் வாய்ப்பு...

.....வாருங்கள் கிரிக்கெட் வாசிகளாக!!

மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி. நெல்லியடி அபான்ஸ் குடும்பம்.

**புதுவருட தினத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

| | |
|---|---|
| சேட் | - 400/= |
| பஞ்சாபி | - 450/= |
| பஞ்சாபி | - 350/= |
| ஸ்கேட் | - 200/= |
| லேடீஸ் பிளவுஸ் | - 150/= |

கோலம் சாறிகள் 50% கழிவுடன் பெற்றுக்கொள்ள் இன்றே முந்துங்கள்.

தொ.பே.இல - 0212221508 கணேசன் சென்ரர், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

MYWay English இன் ஆசிரியர்,அலுவலர், வங்கியாளர், மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம் : சனி, ஞாயிறு – 3 மாதம் கட்டணம் : ரூபா 8000/- மட்டும்

பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 1-2, 2-3, 3-4, 4-5, 5-6

உயர்கல்வி மாணவர்களுக்கான சிறப்பு சலுகைக் கட்டணம்

இம்மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் பயிற்சியில் சேரும் பல்கலைக்கழக மாணவர்கள், GAQ, HNDA, BIT, Academy உட்பட உயர்கல்வி கற்போர் மற்றும் பட்டம் பூர்த்திசெய்தோருக்கு கட்டணம் ரூபா 3000/- மட்டும்

குறிப்பு : பாடசாலைகள் அலுவலகங்கள் வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட Discount Coupon இனைப்பயன்படுத்தியும் சலுகைக்கட்டணத்தை பெறலாம்

MyWay English 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 2229505 077 33 63 456

**சாரதி தேவை**

யாழ்.மாவட்டத்துக்குள் பொருள்களை விநியோகம் செய்வதற்கு கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உடைய சாரதி ஒருவர் தேவை.

தொடர்பு - இல. 321,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல - 0214925102

**தவறிவிட்டது**

02.04.2011 அன்று யாழ்.நகரில் வங்கி ஒன்றிலிருந்து பணம் எடுத்துச்செல்லும் வழியில் ஒரு தொகைப் பணம் தவறிவிட்டது. கண்டெடுத்த கருணையுள்ளம் கொண்டவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் தொலைபேசி இலகத்துக்கு தொடர்பு கொண்டு தந்துதவுமாறு வேண்டுகிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - தொ.பே.இல - 0212255360, 0773573042

**புதுவருடத்தை முன்னிட்டு...**

எமது கணினி நிறுவனத்தில் புதுவருடத்தை முன்னிட்டு 8 ஆம் திகதி முதல்14 ஆம் திகதிவரை என்றும் இல்லாத வகையில் கணினிகளுக்கு 10 வீத விலைக்கழிவுடனும் கணினி உபகரணங்கள் மிகக் குறைந்த விலையிலும் வழங்கப்படவுள்ளன.



தொடர்புகளுக்கு:
நேரில்/தொலைபேசி ஊடாக
தொ.பே: 021 222 1166,
0777667971.

Nalin Information Technologies Pvt Ltd
NALIN Information Technologies Pvt Ltd
195/4, Parameswara Junction, Palaly Road, Thirunelvely.
(48,21,26)

Diploma Courses
Upto 90% Discount.
Ms Office - Rs.4000
Multimedia - Rs.6000
Accounting - Rs.6000
AutoCAD-2&3D - Rs.10800
Web Development - Rs.10800
Closing Date 08.04.2011
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
Fast Track 01 Month
அனைத்து மாணவர்களுக்கும் Free
Dip. in English
ICDL DTP
Accounting ICT
324,Palaly Road,Parameswara Junction

புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
பம்பலப்பிட்டி PC Globe System மானிப்பாய் TA Mobile & Computer System
இணைந்து நடத்தும் மாபெரும் மலிவு விற்பனை
காலம்: 08.04.2011 முதல் 20.04.2011
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



TA Mobile & Computer System
03, ஆலடிச் சந்தி, மானிப்பாய். தொ.பே: 0212255213
(48,19,20)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.